விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 30 வியாழக்கிழமை (15.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 239

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# ஈழம் என்ற கனவுடன் புலம்பெயர் தமிழர்கள்!

## குற்றம் சாட்டுகிறார் அமைச்சர் பீரிஸ்



(கொழும்பு)

ஈழம் என்ற கனவை கைவிட முடியாத சிலர் புலம்பெயர் தமிழர்களில் உள்ளனர். அவர்கள் தமது கனவை நனவாக்கிக் கொள்ளும் நோக்கில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## எகிப்தில் மோதல் 150 பேர் பலி

எகிப்தில் பதவியிலிருந்து விலக்கப்பட்ட அதிபர் மொஹமத் மோர்ஸியின் ஆதரவாளர்களால் அமைக்கப்பட்டுள்ள போராட்ட முகாம்களை அகற்றும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மோதல்கள் காரணமாக சுமார் 150 பேர் (19ஆம் பக்கம் பார்க்க)

## தென்கொரிய பிரதமர் இலங்கைக்கு விஜயம்

தென் கொரியா பிரதமர் யுங்-ஹொங்-வோன் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

அவர் எதிர்வரும் 28 -ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் 30-ம் திகதி வரை அவர் இங்கு தங்கியிருப்பார் எனவும் தென் கொரிய பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தலைமையில் வடக்கில் பிரசாரக் கூட்டம்

### ஐந்து மாவட்டங்களிலும் நடத்த திட்டம்

வட மாகாணசபை தேர்தல் தொடர்பில், வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் பிரதான பிரசாரக் கூட்டங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடத்த திட்டமிட்டுள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

வடக்குத் தேர்தல் நிலைமைகள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வட மாகாண சபைத் தேர்தலுக்கு பொறுப்பாக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் வடக்குத் தேர்தல் (19ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சிகள் இணைந்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்



வெலிவெரியவில் சிங்கள மக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ்சாட்டி, அதனைக் கண்டித்து எதிர்க் கட்சிகளினால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தலைநகர் கொழும்பில் கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை, முக்கிய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில், பொது எதிர்க் கட்சிகளின் ஐக்கியத்துக்கான சக்தி என்ற அமைப்பு இந்த போராட்டத்துக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துபவர்கள் ஊர்வலமாகச் செல்லக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு ஒன்றை பிறப்பித்திருந்த போதிலும், ஆர்ப்பாட்டக்காரர்கள், ஹில்டன் ஹோட்டல் சந்திவரை சென்றுவிட்டார்கள்.

இருந்தபோதிலும் அவர்களை அங்கு பொலிஸார் தடுத்துவிட்டனர்.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான, திஸ்ஸ அத்தநாயக்கா, ரவி கருணநாயக்க ஆகியோரால் மகஜர் ஒன்று ஜனாதிபதி அலுவலகத் தில் கையளிக் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துடன் இணைந்த மு.கா. உறுப்பினர்கள் நிறுத்தம்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ உறுப்பினர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, மன்னார், புத்தளம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்டவர்களே இவ்வாறு கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மா (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் செயற்பட்டார் ஹக்கீம்; தேசிய சுதந்திர முன்னணி பாய்ச்சல்

விடுதலைப் புலிகளுடன் வன்னியில் சமாதான விருந்துகளை நடத்தி நாட்டை இரண்டாக பிரிக்க தருணம் பார்த்திருந்த ரவூப் ஹக்கீம், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரிடம் பிரிவினைவாதத திற்கு சேவகம் செய்யும் கருத்துக்களை முன்வைத்தாலும் அது ஆச்சரியமானதல்ல என்று தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வே.பிரபாகரனுடன் இணைந்து நாட்டை பிரிக்கும் பொறியை அன்று பொருத்திய ஹக்கீம், இன்று அரசாங்கத்தில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகளின் கைப்பாவையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தேவையான வகையில் செயற்பட்டு வருகிறார்.

வடக்கு மாகாண முஸ்லிம்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராக அரசாங்கத்திற்கு வாக்களிப்பதை தடுக்கும் நோக்கத்தில் ஹக்கீம், வட மாகாணத்தில் தனித்து போட்டியிட முடிவு செய்தார்.

வரலாறு முழுவதும் ஹக்கீம் பிரிவினைவாதத்திற்கு சேவகம் செய்பவர் என்பதை ஒப்புவித்துள்ளார் என்றார்.

## காணாமல்போனோர் தொடர்பில் விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

காணாமல் போனவர்களை பற்றி விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

யுத்த காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல்போனவர்களைப் பற்றி விசாரிப்பதற்காகவே 3 பேரைக் கொண்ட இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தலைவராக கொண்ட இந்த குழுவில் திமின்கு படாதுருகே பிரியந்தி சுரஞ்சனா வைத்தியரத்ன அம்மையார் மற்றும் மனோ ராமநாதன் அம்மையார் ஆகியோர் உறுப்பினராக உள்ளனர்.

இந்த ஆணைக்குழுவிற்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கும் தேவைப்பட்டால் புலனாய்வு செய்வதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு ஆறு மாதங்களிற்குள் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ஆட்கள் கடத்தப்பட்ட அல்லது காணாமல் போகச் செய்த சம்பவங்கள் கண்டறியப்படுமிடத்து அதற்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காண்பது அவசியம் எனவும் அந்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ராஜினாமா

## அரசுடன் இணைவதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின்(சுழிபுரம்) ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் அரசாங்கத்தரப்பினருடன் இணைந்து செயற்படும் நோக்குடன் தனது பதவினை நேற்று உத்தியோக பூர்வமாக ராஜிநாமா செய்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியிலுள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான வீரசிங்கம் சிவகுமார் என்பவரே இவ்வாறு தனது பிரதேச சபை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டு அரசாங்கத் தரப்பினருடன் இணைந்துள்ளார்.




பிரதேச சபையின் செயலாளரிடம் தனது ராஜினாமா கடிதத்தை நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் ஒப்படைத்த உறுப்பினர், பிரதேச சபை தவிசாளருடனும் கலந்துரையாடி தனது ராஜினாமா தொடர்பாக அறிவித்தார்.

இதனையடுத்து வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான என்.சிராஸ் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினருக்கு சந்தனமாலை அணிவித்து அவரைக் கட்டித்தழுவி மகிழ்ச்சியடைய சிராஸின் ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி ஆரவாரப்பட்டனர்.

இது தவிர தனது கைகளை கோர்த்தபடி மேலே உயர்த்தி வெற்றி எமக்கே எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை பிரதேச சபை உறுப்பினர் அரசாங்கத் தரப்பினருடன் இணைந்தமை குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்துக் கூறுகையில்,

கடந்த 2004-ம் ஆண்டு தொடக்கம் 2013-ம் ஆண்டு வரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட்டு வந்தேன்.

கடந்த வருடம் உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலில் வலிகாமம் மேற்கில் போட்டியிட்டு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டேன்.

ஆனால் எமது பிரதேச சபையின் மூன்றாவது மாதாந்தப் பொதுக் கூட்டத்திலேயே சாதி அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள் தலைவிரித்தாடி உறுப்பினர்களுக்கிடையில் உட்கட்சி முரண்பாடு ஏற்பட்டது.

இதனால் இங்கு ஆர்ப்பாட்டங்களும் எம்மால் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடம் எமக்கு எந்த விதத்தீர்வையும் பெற்றுத்தரவில்லை.

இதன்காரணமாக அந்தப் பிரதேச சபை உறுப்பினர் பதவியைராஜினாமாசெய்துவிட்டு அரசாங்கத் தரப்பினருடன் இணைந்து செயற்பட முடிவெடுத்தேன் என அவர் தெரிவித்தார். (எ-6)

## அஸ்வர் எம்.பியும் வைத்தியசாலையில்

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வர் நேற்று புதன்கிழமை காலை வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீரென சுகவீனமுற்றதை அடுத்து கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனும் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு விசேட ஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளார். (எ-11)

## வருடாந்த ஏர்பூட்டுவிழா

வருடா வருடம் பூநகரி கமநல சேவை நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிக்கான ஏர்பூட்டு விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6-ம் திகதி அதிகாலை 3 மணி தொடக்கம் 7 மணி வரையானஇடைப்பட்ட நேரத்தில் செல்லையாதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளதாக கமநல சேவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-84)

## ஜென்ம தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஸ்ரீ அம்மா பகவான் சத் சங்களின் ஒன்றியத்தினால் நடத்தப்படும் ஸ்ரீ கல்கி பகவதி பத்மாவதி தேவி ஜென்மதின மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அறுபது லஷ்மி நாம ஜஸ்வர்ய கலசபூஜை 60 தம்பதியர்களால் நிகழ்த்தப்படவுள்ளது.

இத்தினத்தில் பிற்பகல் 5 மணிக்கு நேரடி இணைய ஒளிபரப்பும் இடம்பெறவுள்ளது. (அ-5)


## இலங்கை மின்சார சபை - யாழ் பிரதேச அலுவலகம்
### அதியுயர் அழுத்த மின்சாரக் கடத்துகை பற்றிய அறிவித்தல்

கிளிநொச்சி – சுன்னாகம் இடையே அமைக்கப்பட்டுள்ள 132,000 வோல்ட் அதியுயர் அழுத்த மின்மார்க்கத்தினூடாக (பழைய லக்ஸபான மார்க்கம்) எதிர்வரும் 16.08.2013 வெள்ளிக்கிழமை முதல் மின்சாரம் சுன்னாகத்திற்கு வழங்கப்படவுள்ளது. எனவே ஊரெழு, நீர்வேலி, போயிட்டி, அச்செழு, சிறுப்பிட்டி, புத்தூர் கிழக்கு, மட்டுவில், சரசாலை, மந்துவில், வரணி, கொடிகாமம், எருவன், மிருசுவில், சோரன்பற்று, கோவில்வயல், இயக்கச்சி, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்களை குறிப்பிட்ட மின்மார்க்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-0212240302**

“சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை”

பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம். (சி-4327) 14.08.2013

## தூய உற்பத்தி நடைமுறைகள்

எமது நிறுவனத்தினால் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதான அறிவூட்டல் நிகழ்வு ஒன்று எதிர்வரும் 24.08.2013-ம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1. தூய உற்பத்தி நடைமுறைகள்.
2. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் உற்பத்திகளை மேற்கொள்ளுதல்.
3. தரமுகாமைத்துவம்.
4. தரநிர்ணயம் மற்றும் அதற்கான வழிகாட்டல்கள்.

போன்ற பிரதான விடயங்கள் மேற்படி நிகழ்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக உணவு தயாரித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய தொழில் துறையினருக்கு மேற்படி நிகழ்வானது மிகப்பொருத்தமானதாகும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால், மேற்படி நிகழ்வில் பங்கேற்க விரும்புவோர் எதிர்வரும் 21.08.2013-ம் திகதிக்கு முன்னர் **இல.124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலமைந்துள்ள எமது மன்றத்துடன் தொடர்புகொண்டு உறுதிசெய்யவும். மேலதிக விபரங்களுக்கு 0212226609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

(சி-4315)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815
E-mail : valampurii@yahoo.com

## வேலைவாய்ப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி

நீங்கள் எதிர்பார்ப்பது கௌரவமான நிரந்தர தொழிலா? உங்கள் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய மாதாந்தம் ரூபா 60000.00 உழைத்து எதிர்கால வாழ்வை சிறப்பாக அமைத்துக்கொள்ள அருமையான தொழில்வாய்ப்பு (Excutive)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் துறையில் அக்கறையுள்ள பாடசாலையை விட்டு விலகியவர்களும் நிரந்தர (தொழில்) வருமானத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் 18-30 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

0777274795/0215686466
73. St. Annes Church Road, Chundikuly-Jaffna.

SPOKEN ENGLISH AT JAFFNA . RAM 0722008022
(சி-4325)

## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250/-
தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
**சைவ உணவு: 160/-** **அசைவ உணவு 185/-**
தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(சி-4312)

### தொடர்ந்தும் மேலதிக சேவையில்...

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

குறிப்பு: விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(C-431) T.P. No.:-021 222 5392


## மரண அறிவித்தல்



### திருமதி அக்னஸ் புலோரன்ஸ் சொலமன் (வயலட்)

மாட்டீன் வீதியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக் குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அக்னஸ் புலோரன்ஸ் சொலமன் (வயலட்) நேற்று (14.08.2013) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. ஜோன் எட்வேட் ஜெஸ்வர் தம்பதியரின் அன்பு மகளும் திரு.ஜோ.கிருபைச்சந்திரதாஸ் சொலமன் அவர்களின் அன்பு மனைவியும் Rev.திருமதி மாளின் லோ்றென் சகாயம் (அசெம்பிளிரெப்கோட், ஆரையம்பதி), ரவிலிங்கன் சொலமன் (றெனி மூக்குக் கண்ணாடி - உரிமையாளர்)

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.08.2013) வியாழக்கிழமை மாலை 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
J.K.E சொலமன் (கணவர்)
R.L. (சொலமண்) மகன்
021 222 8503
54/20. விதானையார் வீதி,
சுண்டுக்குளி.
(சி-4320)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பேராசை

அள்ள அள்ளக் குறையாதது அட்சய பாத்திரம், அது நமக்குத் தெரியும். கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால், போடப்போட நிரம்பாத ஒரு பாத்திரம் உண்டு. அது என்ன தெரியுமா?

எம்மில் பலபேரிடம் அந்தப் பாத்திரம் உண்டு. அது தான் 'பேராசை' என்ற பாத்திரம். அதை நிறைவு செய்யவே முடியாது.

போரசை பற்றி சூஃபி இலக்கியத்திலே ஒரு பிரபலமான கதை இருக்கிறது. அதை சுவாமி சுகபோ தானந்தா எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஒரு மன்னர் நகர்வலம் வந்து கொண்டிருந்தார்.

அவ்வேளையில் ஒரு பிச்சைக்காரன் மன்னர் எதிரிலே வந்தான்.

"ஐயா! பிச்சை கொடுங்கள்" என்றான்.

என்னுடைய அமைதியைக் கெடுக்காதே... போ! என்றார் மன்னன்.

அவன் சிரித்தான்.

"அரசே உங்களின் அமைதி கெடக்சவடிய நிலையிலே இருந்தால், அதற்குப் பெயர் அமைதியே கிடையாது" என்றான்.

தனக்கு எதிரிலே நிற்பது வெறும் பிச்சைக்காரன் இல்லை... யோகி! என்பதை மன்னர் புரிந்து கொண்டார்.

"துறவியே! உங்களுக்கு என்னவேண்டுமென்றாலும் கொடுக்கிறேன்!" என்றார்

அத்துறவி மறுபடியும் சிரித்தார்.

"அரசே! உங்களால் முடியாததை எல்லாம் கொடுக்க் முடியும் என்று சத்தியம் செய்யாதீர்கள்" என்றார்.

மன்னருக்கு கோபம் வந்து விட்டது. என்ன இவர் இப்படி சொல்கிறார் என்று நினைத்தார்.

நகர்வலம் வருவதைப் பாதியிலே நிறுத்தினார்.

"வாருங்கள் அரண்மனைக்கு!" என்றார். துறவியை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு சென்றார்.

துறவி தன்னிடமிருந்த பிச்சைப் பாத்திரத்தை நீட்டினார். "இது நிறைய எனக்கு பொற்காசுகள் வேண்டும்" என்றார்.

"இவ்வளவு தானா?" என்று சொல்லிக் கொண்டு கையைத் தட்டினார் மன்னர். ஒரு பெரிய தாம்பாளம் நிறைய பொற்காசுகள் வந்து குவிந்தன. அதை அள்ளிப் போட்டார். போடப்பட்ட அந்தப் பிச்சைப் பாத்திரம், பொற்காசுகள் அத்தனையையும் உள்ளே வாங்கிக் கொண்டே இருக்கிறது.

மூட்டை மூட்டையாகப் பொற்காசுகள் கொட்டி முடிந்தது. அது விழுங்கிக் கொண்டே இருக்கிறது. கடைசி வரை அந்தப் பிச்சைப்பாத்திரம் நிரம்பவேயில்லை. அரசனிடம் இருந்த கர்வம் போய்விட்டது.

அப்படியே 'பொத்' என்று துறவி காலிலே விழுந்தார்.

அப்போது அந்தத்துறவி சொன்னார்; "மன்னா! இந்தப் பிச்சைப் பாத்திரத்தை உங்களால் மட்டுமல்ல... வேறு யாரையும் நிரப்ப முடியாது. அதற்கு என்ன காரணம் என்றால்... இது சாதாரண பிச்சைப் பாத்திரம் அல்ல...

"பேராசையுடன் வாழ்ந்து இறந்து போன ஒரு மனிதனின் மண்டையோடு இது!" என்றார்.

இறந்த பின்னரும் நிறைவு இல்லையென்றால், அது எப்படிப்பட்ட பேராசையாக இருக்குமென்று யோசித்துப் பாருங்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இராணுவத்தினரிடமுள்ள மீன்பிடிப் படகுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க முடிவு

(கும்பளை)

வடமாகாண கடற்பரப்பிற்குட்பட்ட இராணுவத்தினரிடமும் கடற்படையினரிடமும் உள்ள மீன்பிடி படகுகளை இலகு முறையில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கவும் இங்குள்ள கடற்தொழிலாளர்களுக்கு 0.25 வீத வட்டியிலான கடன் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தையிலுள்ள கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் காரியாலயத்தில் ராஜித சேனாரட்ண தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி மகா சம்மேளனப் பொதுக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் அதிகளவான மீன்பிடி படகுகளை அவற்றுக்குரிய ஆவணங்களின்மையால் உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர்.

இப்பகுதி மக்கள் இடப்பெயர்வில் ஆவணங்களை இழந்தமையால் படகுகளைவழங்க மாற்று வழி தேவையென கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் மகா சம்மேளன உபதலைவர் நா.பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

இதனையடுத்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர்ராஜிதசேனாரட்ண இலகுமுறையில் படகுகளை வழங்கவும் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு கடன்திட்டம் தொடர்பில் மீனவர்கள் கடற்தொழில் நீரியல்வளத்துறைப் பணிப்பாளரிடமோ அல்லது கிராமிய கடற்றொழில் அபிவிருத்தி அமைப்புக்களிடமோ கேட்டறிந்து கொள்ள முடியும் எனவும் சுட்டிக் காட்டிக்காட்டப்பட்டது.

இக்குழுக் கூட்டத்தில் கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி மகா சம்மேளன உறுப்பினர்கள் இலங்கையின் சகல மாவட்டங்களிலுமுள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளர்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின்உறுப்பினர்கள் ஆகியோர்கலந்து கொண்டனர். (அ-9-19)

# தபால் மூலம் வாக்களிக்க 100,000க்கு மேற்பட்டோர் விண்ணப்பம்

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதில் அதிகமாக 45 ஆயிரத்து 969 விண்ணப்பங்கள் குருநாகல் மாவட்டத்திலேயே கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுமார் 39 ஆயிரம் தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் கண்டி மாவட்டத்திலும் 11 ஆயிரம் தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் நுவரெலியா மாவட்டத்திலும் கிடைக்கப் பெற்றுள்ளது என தேர்தல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை 12 ஆயிரம் தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் யாழ். மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால்மூலம் வாக்களிப்பதற்கு தகுதியானவர்களை தெரிவு செய்யும் நடவடிக்கை இன்று வியாழக்கிழமையுடன் நிறைவடையவுள்ளதாக தேர்தல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டது.

மாகாண சபை தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# காண்பியக்கலை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரால் நடத்தப்படும் காண்பியக் கலைக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 1980 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திற் காண்பியக்கலை எனும் கருப் பொருளிலான கருத்துரைகளை ஓவியர்களான அருந்ததி ரட்ணராஜ் மற்றும் கமலா வாசுகி ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேற்படி கருத்தரங்கில் கலை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் அ.நோ.கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார். (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 20 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 80 |
| தக்காளி | 40 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 60 | 70 | 100 |
| கரட் | 100 | 100 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 30 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-120 | 160 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 160 |
| பாகற்காய் | 40 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 60 |
| லீக்ஸ் | 100 | 110 | 140 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 80 |
| போஞ்சி | 100 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 240 | 90 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 |

# இராசி பலன்

15.08.2013
(ஆடி 30, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
நவமி முன்னிரவு 10.07 மணிவரை
அனுசம் முன்னிரவு 10.19 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை

**மேடம்** இறை வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டி வரலாம்.

**இடபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நண்பர்கள் மூலம் நம்பிக்கைகள் நடைபெறுலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் மாறும்.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது அதிக பிரியம் காட்டுவீர்கள், கல்வி நலன் கருதி சில செலவுகளை மேற்கொள்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**சிங்கம்** வெளியூர்த் தொடர்புகள் சிறப்பாக இருக்கும், தாய் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் நீங்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், அந்நியர் சந்திப்புண்டு.

**துலாம்** உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் சுமுகமாக முடியும், திருப்பு முனையான நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**தனுசு** தொழில் நலன்கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள், பிதா சிந்தையுண்டு, சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**மகரம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், வழிபாட்டில் கூடிய ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், கௌரவமான நாள்.

**கும்பம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், எதிர்கால நலன்கருதி புதிய திட்டமொன்றை மேற்கொள்வீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்கபே மறைப்புக்களை நீக்குவது குறித்து ஆராய்வு

(தும்பளை)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து நெற்கபேகளிலும் மறைப்பு நீக்கப்படவேண்டுமென யாழ்.மாவட்ட செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.


யாழ்.மாவட்ட செயலகத்தினால் சகல பிரதேச செயலகங்களுக்குமான சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம்




கடந்த மாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது.


ஆயினும் இத் தீர்மானத்தால் நெற்கபே உரிமையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான அறிக்கையை ஒவ்வொரு பிரதேச செயலகத்திலுமுள்ள சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தது.

நெற்கபேகளில் கணனிகளை சுற்றி மறைப்பு அடைப்பதனால் ஏற்படும் அசம்பாவிதங்களை இல்லாதொழிக்கவே இத் தீர்மானம் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-19)




# மூன்று திசைகளிலிருந்து வந்த வாகனங்கள் மோதுண்டன

## இருவர் படுகாயம்!



(யாழ்ப்பாணம்)

மூன்று திசைகளிலிருந்தும் வந்த வாகனங்கள் ஒன்றோடொன்று மோதியதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 8.15 மணியளவில் கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் தாவடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுரேஸ் (வயது 44), கோண்டாவிலைச் சேர்ந்த கேதீஸ்(வயது 32) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, பெண்ணொருவர் சிறு காயத்திற்கும் உள்ளானார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பெண்ணொருவரை ஏற்றி வந்த வரது ஹொண்டா ரக மோட்டார் சைக்கிள் குளப்பிட்டி வீதியினூடாக கே.கே.எஸ்.வீதியைக் கடந்து திரும்பமுயற்சித்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்றும், குளப்பிட்டி வீதியிலிருந்து சுன்னாகம் நோக்கி திருப்ப முயற்சித்த சிறிய ரக மோட்டார் சைக்கிளும் வீதியை கடக்கமுயன்ற ஹொண்டா ரக மோட்டாருடன் மோதியுள்ளன.

இதில் படுகாயமடைந்த இரு குடும்பஸ்தர்களும் பொதுமக்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஒரு மணித்தியாலம் வரையில் விபத்துக்குள்ளாகிய வாகனங்கள் வீதியில் அகற்றப்படாதிருந்தமையால் அங்கு சன நெரிசல் ஏற்பட்டதோடு போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ்ப்பாணப் போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு, விபத்துக்குள்ளான வாகனங்களையும் அகற்றி போக்குவரத்தை சீர்செய்தனர்.

விபத்துக்குள்ளானவர்கள் இணங்கிப் போனமையினால் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொள்வதை கைவிட்டனர். (அ-4)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஐரோப்பிய எம்.பிகள் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையை ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரை முதலில் நேரில் சென்று சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர்கள், பின்னர் மேலதிக அரசாங்க அதிபருடன் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜாவை சந்தித்து உரையாடியிருந்தனர்.

இச்சந்திப்பின் போது வைத்தியசாலையின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது.

ஐரோப்பிய பாராளுமன்றம் யாழ்ப்பாணத்தின் சுகாதாரத் துறைக்கு எவ்வாறான பங்களிப்பை வழங்கி வருகின்றது என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிகள் தொடர்பிலும் பணிப்பாளரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இறுதியில் வைத்தியசாலை பகுதிகளையும் பார்வையிட்டு சென்றுள்ளனர்.

இதேவேளை, ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த கத்துருசிங்கவையும் சந்தித்துள்ளது. (அ-4)

# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை

## சாவகச்சேரி நகராட்சி கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் தமக்கு அறிவித்தல்கள் விடுக்கப்படுவதில்லை என சாவகச்சேரி நகராட்சிமன்ற உறுப்பினர் சுதர்சன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் காரணமாக தமது பிரதேச மக்களின் தேவைகளை சுட்டிக்காட்டி நிவாரணம் பெறமுடியவில்லை என நேற்று நடைபெற்ற நகராட்சி மன்ற கூட்டத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த தவிசாளர் தென்மராட்சி பிரதேச செயலாளருக்கு இது பற்றித் தெரியப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் தென்னிலங்கையின் பள்ளிவாசல்கள் எரிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து உறுப்பினர் ஸ்ரீதரன் கொண்டு வந்த பிரேரணை சகல அங்கத்தவர்களும் முழுமனதாக ஏற்றுக் கொண்டு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

அதுபற்றி கண்டன அறிக்கையை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சாவகச்சேரி சிவன் கோவில் அருகில் அமைந்துள்ள கலை,கலாசார மண்டபம் சில இடர்பாடுகள் காரணமாக மக்கள் பாவனைக்கு விடப்படாது மூடப்பட்டுள்ளது.

இதனால், இவ் அரங்கில் நிகழ்வுகளை நடத்தமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இவ்விடயத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் தலையிட்டு புதிய நிர்வாகத் தெரிவினூடாக இம் மண்டபத்தை விரைவில் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-29)

# கைபேசி திருடிய இருவர் பொலிஸாரால் கைது

(கரவெட்டி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை பக்தர்களின் கையடக்கத் தொலைபேசிகளைக் களவாடிய இரு சந்தேக நபர்களை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி ஆலயத்தில் உற்சவம் இடம்பெற்று வரும் வேளை தரிசிக்க வந்த பக்தர்களின் இரு கையடக்கத் தொலைபேசிகளை இரு நபர்கள் களவாடியுள்ளனர்.

இருவரில் ஒருவர் பாடசாலை மாணவனாகும்.

மாணவனிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து புத்தூர் பகுதியில் அவரது வீட்டில் வைத்து மற்றொருவரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்ததாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, குறித்த இரு சந்தேக நபர்களையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-9-24)

# இந்திய புடைவை வியாபாரி பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

இந்திய புடைவை வியாபாரி ஒருவரைக் கோப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

அத்தோடு, அவரிடமிருந்து சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான புடைவை மற்றும் ஆடை வகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.கல்வியங்காட்டு சந்திப்பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தியாவின் தமிழகத்திலுள்ள தூத்துக்குடியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க பரிந்துரைகளை அமுல்படுத்த ஐ.நா.சபை பூரண ஒத்துழைப்பு வழங்கும்

## இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி சுபினேய் தெரிவிப்பு

நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்திய போதிலும் அவ்வாறான உத்தரவுகளை இலங்கையின்மீது நிர்ப்பந்திக்கவில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் நல்லிணக்க முனைப்புக்களை முன்னெடுக்க வேண்டும் என்பதே தமது அமைப்பின் விருப்பம் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபினேய் நெண்டி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நல்லிணக்க முனைப்புக்கள் வெளியிலிருந்து திணிக்கப்படவோ இறக்குமதி செய் யப்படவோ கூடாது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். நல்லிணக்கம் குறித்த காத்திரமான திட்டங்கள் இலங்கையிடம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளில் நல்லிணக்கம் குறித்த யோசனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த சிந்தனை மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் நல்லிணக்கத்திற்கான காத்திரமான பரிந்துரைகள் காணப்படுவதாகவும் அவற்றை அமுல்படுத்த இலங்கை அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசியரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தேசிய மொழிகள் அமைச்சு முக்கிய பங்காற்றி வருவதாக அவர் குறிப் பிட்டுள்ளார். (அ-2)

# வரலட்சுமி பூசை

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயத்தின் வரலட்சுமி விரத அபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 8 மணிக்கும் தொடர்ந்து 10 மணிக்கும் வரலட்சுமி காப்புப் வழங்கப்படவுள்ளது. (அ-5)

# ஜோதிலிங்க இரதபவனி

காசி விஸ்வநாதர் -வடமராட்சி
சாண்டா சந்தை வழியே
காலை 9.00-மாலை 3.00
பொலிகண்டி மேற்கு கந்தசுவாமி கோயில்
மாலை 4.00-இரவு
வல்வெட்டித்துறைச் சிவன் கோயில்
இளைஞர் நிகழ்வு
மாலை 6.00-7.00
**ஸ்ரீ சோமநாதர்-வலிகாமம்**
காலை 9.00-மதியம் 2.00
மாவடி கண்ணகை அம்மன் கோயில்
வட்டுசிவன் கோயில், டச் ரோட், சங்கானை வழியே
மாலை 7.00-இரவு
சித்தங்கேணிப் பிள்ளையார் கோயில்
**இராமேஸ்வரம்-கிளிநொச்சி/தென்மராட்சி**
காலை 7.00-9.00
கச்சான் வெளி பிள்ளையார் கோயில்
காலை 11.00-மதியம் 2.00
கடற்கரைக் குடியிருப்பில் தரிசனம்
மாலை 6.00-இரவு
மிருசுவில் வடக்கு துர்க்கையம்மன் ஆலயம்

# பதிவு இலக்கம் இல்லாத குடிநீர் போத்தல்களை வாங்காதீர்!

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் பதிவு இலக்கம் இல்லாத குடிநீர் போத்தல்களை வாங்கவேண்டாம் என பொது சுகாதார பரிசோதகர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

புகையிரதங்களில் பேருந்துகளில் மோச்டியாக குடிநீர் போத்தல்கள் விற்பனை செய்வதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் எம்.ஜீ.யூ.ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமது அதிகாரிகள் திடீர் சுற்றிவளைப்புகளிலும் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவித்தார். ஏற்கனவே பாவித்த வெற்று தண்ணீர் போத்தலில் குழாய் நீரை நிரப்பி சலோடேப் சுற்றி சீல் செய்த பின்னர் மீண்டும் நல்ல குடிநீர் போத்தலாக விற்பனை செய்யும் மோசடி வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பரபரப்பான இடங்களிலேயே இவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதாகவும் குறித்த இடங்களில் திடீர் சுற்றிவளைப்புகள் நடத்தப்படுவதாக்வும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் கைப்பற்றப்பட்ட மாதிரிகள் பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்ட போதிலும் அவை உடனடியாக திரும்பவும் கிடைப்பதில்லை என்றும் இது தொடர்பாக சுகாதார அமைச்சு கூடு தல் கவனம் செலுத்த வேண் டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# மடு திருவிழாவில் 5 இலட்சம் பக்தர்கள் கலந்து கொள்வர்

மடு திருப்பலியின் வருடாந்த திருவிழா இன்று வியாழக்கிழமை கொண்டாடப்படு கிறது.

இன்று காலை 6 மணிக்கு திருவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து மடுமாதா திருச்சொரூப பவனியும் இறுதி ஆசீர்வாதமும் இடம் பெறவுள்ளன.

இம்முறை மடு திருவிழாவில் நாட் டின் பல பாகங்களிலிருந்தும் 5 இலட்சம் பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். அவர்களுக்கான சகல வசதிகளையும் மன்னார் மாவட்டச் செயலகமும் மடுபரிபாலன சபையும் ஏற்பாடு செய்துள்ளதாக மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை விக்டர் தெரிவித்துள்ளார்.

திருவிழா கூட்டுத் திருப்பலி பரிசுத்த பாப்பரசரின் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேரருட் திரு ஜோசப் ஸ்பிரிடரி தலைமையில் நிறைவேற்றப்படவுள்ளது.

திருவிழா கூட்டுத்திருப்பலியை திரு கோணமலை மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம், கண்டி மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு வியான்னி பெர்ணாண்டோ ஆண்டகை, அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு அந்ராதி ஆண்டகை, கொழும்பு மறை மாவட்ட ஓய்வு நிலை பேராயர் பேரருட் திரு ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை ஆகியோர் இணைந்து நிறைவேற்றவுள்ளனர் என மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் தெரிவித்தார். (அ-2)

## அன்பு வாசகர்களே!

நல்லூரான் உற்சவகால பாமாலைக்காக தங்களிடமிருந்து தரமான கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தங்கள் கவிதைகளை நல்லூர் கந்தன் பாமாலை, ஆசிரியர், வலம்புரி, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். (ஆ-ர்)


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து(V)
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா : 20.5
உயரம்: 5'6"
தகைமை/தொழில: **BSc, Following MSc** பொறியியலாளர் அவுஸ்திரேலியா **Skill Migration**
தொ.இ:B2236

பிறப்பு: 1981 இந்து(V)
நட்சத்திரம்: உத்தராடம் 2
உயரம்: 5'8"
கி.பா 78 செவ் 7
தகைமை/தொழில்: **Quantity Surveying**
ஓமான் Work Permit
தொ.இ:B2238

பிறப்பு: 1979 இந்து(V)
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா :72.25 சூ,செவ் 11
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: **MSc Engineering,**
சிரேஷ்ட விரிவுரையாளர
விவாகரத்து பெற்றவர்
தொ.இ:B2239

பிறப்பு: 1981 இந்து(V)
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா :25 செ 2
தகைமை/தொழில்: A/L **German**
தொ.இ:B2240

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து(குருகுலம்)
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா :53
உயரம்: 5' 2" செவ் 2
தகைமை/தொழில்: பட்டதாரி
அரச உத்தியோகம்
தொ.இ:G1019


பிறப்பு: 1985 இந்து(V)
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா :40.25 செவ் 1
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L
தாதி
தொ.இ:G1022

பிறப்பு: 1975 இந்து(V)
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா : 21
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: A/L
பதிவு திருமணத்துடன்
விவாகரத்து பெற்றவர்
தொ.இ:G1027

பிறப்பு: 1988 இந்து(V)
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா :32
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: **Business Management, BA UK student VISA**
தொ.இ:G1016

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி





புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!
நல்லூரான் நிழலடியில் 100% Natural Pasteruized and Homogenize ஐஸ்கிறீம் With Minerels, Sylo Food and bavereges (pte) Ltd நிறுவனத்தின் அறிமுக விலையில் எமது நல்லூர் விற்பனை நிலையத்திற்கு வாருங்கள். சுவையுங்கள் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லுங்கள்.
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003
SYLO:- Sweet your Life Orbit
(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நிலங்களில் இருந்து எம்மை

# சிங்கள மக்கள் துரத்திவிட்டனர்

### பாதிக்கப்பட்டவர்கள் மகஜர் கையளிப்பு

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் வடக்கு, மத்தி, தெற்கு, கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது விவசாய நிலங்கள் அபகரிப்புத் தொடர்பாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நா.வேதநாயகனிடம் மகஜர் ஒன்றை நேற்று மதியம் கையளித்துள்ளனர். இம் மகஜரின் பிரதி ஜனாதிபதிக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணியைச் சேர்ந்த மக்கள் தாம் 1612 ஆம் ஆண்டிலிருந்து குறித்த காணியில் பூர்வீகமாக விவசாயம் செய்து வந்தோம். 1984 ஆம் ஆண்டு இடப்பெயர்வினால் அப் பகுதியை விட்டு வெளியேறி பல இடங்களிலும் வாழ்ந்தோம்.

பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு எமக்கு குடியிருப்பு நிலங்கள் வழங்கப்பட்டு இப் பகுதியில் நாம் மீள்குடியேறியபோதும் ஆறு மாதங்கள் மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டது.

என்வே, கடந்த வருடம் மிக வறுமையான நிலையை எதிர்கொண்ட நாம் இவ்வருடம் மீளவும் எமது விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய எண்ணி எமது நிலங்களுக்குச் சென்ற போது சிங்கள மக்களும், மகாவலித் திட்டத்திற்கு உரியவர்கள் என தம்மை இனங்காட்டிக் கொண்ட மக்களும் அவ் விவசாய நிலம் தமக்குரியது என தெரிவித்ததுடன், எம்மை அந்நிலத்திலிருந்து வெளியேற்றியும் விட்டனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 821 குடும்பங்களின் ஏறக்குறைய 8 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களைத் நாம் இழந்துள்ளோம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின்போது எமது ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்விடயம் தொடர்பாக உடனடியாகத் தீர்வு காணப்படாவிடின் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவும் உள்ளோம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு பதிலளித்த அரசாங்க அதிபர்,


தற்போது தேர்தல் காலம் ஆகையால், உடனடியாக நடவடிக்கை எடுக்கமுடியாது என்றும் தேர்தலின் பின்னர் இப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் கூறினார்.

மேலும் இது தொடர்பாக,

ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் தெரியப்படுத்துவதாக அவர், அம் மக்களுக்கு உறுதியளித்தார்.

100 இற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு இம் மகஜரை அரச அதிபரிடம் கையளித்துள்ளனர்.

(அ-267)



கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் கொடியேற்றத்தில் சுவாமி வெளிவீதி வருவதைப் படத்தில் காணலாம்.(படம்:- சிவநகர் செய்தியாளர்)

## வீடு திருத்தத்திற்கான கொடுப்பனவை விரைவில் எமக்கு வழங்குங்கள்

### மூன்று மாதங்களாக மக்கள் காத்திருப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகளின் பகுதித் திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பிரதேச செயலகம் ஊடாக யு.என். கபிதாஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இதுவரையிலும் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை என குறித்த பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இத்திருத்தவேலைக் கொடுப்பனவுக்காக மேற்படி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளின் பயனாளிகளால் வீடுகள் பற்றிய சரியான விபரங்கள் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை பிரதேச செயலகமூடாக குறித்த நிறுவனத்திடம் முன்னதாகவே வழங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட வீடுகளைக் கொண்ட பயனாளிகள் மேலதிக திருத்தத்திற்கான பொருட்களை கொள்வனவு செய்துள்ள நிலையில் இக் கொடுப்பனவுக்காக காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் இதன் காரணமாக 100 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மழைக்காலம் ஆரம்பமாகவுள்ளமையால் வீடுகளைத் திருத்த முடியாது தாம் சிறுபிள்ளைகளுடன் பெரும் இன்னல்களை சந்திப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, மேற்படி மக்களின் தேவையை பூர்த்தி செய்ய பிரதேச செயலகத்தில் பணிபுரியும் உரிய அதிகாரிகள் விரைந்து கவனம் எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ-5-254)

## தந்தையால் தாக்கப்பட்ட மகன் வைத்தியசாலையில் அனுமதி

(கனகபுரம்)

ஏழு வயதுச் சிறுவன் தந்தையால் அடிகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வட்டக்கச்சியைச் சேர்ந்த குறித்த சிறுவனின் தந்தை சிறுவனைத் தாக்கி உடலில் அடிகாயங்கள் ஏற்படுத்திய நிலையில் அத் தந்தையாராலேயே இரு நாட்களுக்கு முன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சிறுவன் அனுமதிக்கப்பட்டபோது அச் சிறுவனின் தந்தை தனது மகன் தன்னுடைய வீட்டுக்கு அருகில் உள்ளவர்களால் தாக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

பின்னர் வைத்தியர்கள் அச் சிறுவனிடம் விசாரணை செய்தபோது தன் தந்தையாலேயே தான் தாக்கப்பட்டதாக சிறுவன் தெரிவித்துள்ளான்.

இதனை அறிந்த தந்தை உடனடியாக வைத்தியசாலையை விட்டு வெளியேறி தலைமறைவாகியுள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுவனின் தந்தையை பொலிஸார் தேடி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-259)




## வவுனியா சிறுபோக நெற்செய்கையில் கபில நிற தத்தியின் தாக்கம் அதிகரிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் இவ் வருட சிறுபோக நெற் செய்கை அறுவடை 40% முடிவடைந்துள்ள நிலையில் சற்று தாமதமாக பயிரிடப்பட்ட பாவற்குளம் பகுதி நெல் வயல்களில் கபில நிற தத்திகளின் தாக்கம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது என வவுனியா விவசாய திணைக்களத்தின் பயிர் பாதுகாப்பிற்குப் பொறுப்பான பாடவிதான உத்தியோகத்தர் இரா. தர்மதேவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இத்தாக்கமானது பாவற்குளம் 6 ஆம் வாய்க்கால் பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கு சரியான தடுப்பு முறைகளை கையாண்டு இத்தத்தியின் பெருக்கத்தை கட்டுப்படுத்தாவிடின் 50 % வரை விளைச்சல் பாதிக்கப்படுவதோடு அருகாமையில் உள்ள நெல் வயல்களுக்கும் இத் தத்திகள் மிக விரைவாக பரவலடையும் அபாயம் காணப்படுகின்றது.

ஆசிய நாடுகளில் நெல்லை பாதிக்கும் பூச்சிகளில் பிரதான இடத்தை வகிப்பது கபில நிறத்தத்தி ஆகும். இதன் பாரிய தாக்கமாக தத்தி எரிவு விளங்குகிறது. தத்திகளினால் பாதிக்கப்பட்ட பயிர் முதலில் மஞ்சள் நிறமாவதோடு தத்தியின் எண்ணிக்கை அதிகமாகும் போது பயிர்கள் உலர்ந்து இறந்து போகும்.

இதனை கட்டுப்படுத்தும் வழிகளாக எதிர்ப்புத்தன்மை கொண்ட பயிர்களை பயிரிடுதல் (பிஜி300, பிஜி357, பிஜி304, பிஜி352) பயிர்களை தொடர்ந்து அவதானித்து நீர் முகாமைத்துவம் செய்தல், வாய்க்கால் மற்றும் சுற்றுபுறங்களில் களைகள் இல்லாது துப்புரவாக வைத்திருத்தல், தேவைப்படுமாயின் சிபாரிசு செய்யப்பட்ட பீடைநாசினி ஒன்றை வயலில் நீரினை வடிகட்டியபின் வலு தெளிகருவி (power sprayer) மூலம் பயிரின் அடிப்பகுதியில் படும் வகையில் பயிர்களை பிரித்து விசிறியும் கட்டுப்படுத்த முடியும். சிபாரிசு செய்யப்பட்ட பீடைநாசினிகளை வீசுவதனூடாகவும் கட்டுப்படுத்தலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

(அ-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளிலுள்ள வகுப்பறைகளில் மாணவர்கள் ஏன் மகிழ்ச்சியுடனிருப்பதில்லை?

★ அறிமுகம்

பிள்ளைகளின் இளம்வயது வாழ்வு என்பது பள்ளி வாழ்வுதான். முதுமையின் போதும் உள்ளந்தோறும் உணர்வுபூர்வ குதூகலம் தருவதும் சிறுபராய பள்ளி வாழ்க்கைதான்.

ஆனால் அண்மைக்காலங்களில் பள்ளிக்கூடங்களை விடவும் தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்கள் மகிழ்வுடனிருப்பதாக பெற்றோரும் மாணவரும் கல்வியலுவலர்களும் நம்புகிறோம்.

அவ்வாறாயின் வகுப்பறைகள், பாடசாலைகளில் உண்மையான உணர்வுகளினதும் மனவெழுச்சிகளினதும் வெளிப்பாட்டு களமாக இயங்குவதில்லையா என்ற கேள்வி எழுகின்றது. ஆசிரியர்கள் மாணவர்களின் உணர்வுகளை விளங்கிக் கொள்ளவும் அவற்றுக்கு மதிப்பளிக்கவும் உரியவாறு செயற்படுகின்றனரா? அவர்களிடம் அதற்கான ஆர்வமோ, ஆற்றலோ காணப்படுவதில்லையா? என்ற கேள்விகள் எழுகின்றன.

அறிவைக் கைமாற்றினால் போதுமா? பாடசாலைகளில் உணர்வுரீதியான தொடர்பாடலும் இடைவினையுறவும் போதியளவில் வளர்ச்சியடையவில்லை என்ற கருத்தும் உண்டு. வகுப்பறைகளில் ஆசிரிய- மாணவ இடைவினையுறவுகளில் உண்மையும் குதூகலமும் இல்லையெனப்படுகின்றது.

இவை தொடர்பாக இன்று கலந்துரையாடுவோம்.

★ வகுப்பறை அறிவுக்கைமாற்றல் மையம்தானா?

பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தலில் மேற்கொள்ளப்படும் எல்லா செயற்பாடுகளிலும் ஆசிரியர்-மாணவர்களிடையிலான் உணர்வுகள் பற்றிய புரிந்துணர்வு மிகவும் முக்கியத்துவமுடையது.

அறிவைப் பெறுதலும் வாழ்வையும் தொழிலையும் சிறப்பாக கொண்டு நடத்துவதற்கான திறன்களைப் பெறுதலும் மாத்திரம் கற்றலாகாது. பழகும் மனிதர்களின் உணர்வுகளை சரியாக புரிந்து கொள்வதும் அதற்குரிய உணர்வுகளை வெளிப்படுத்துவதும் கூட நல்ல படிப்பின் வெளிப்பாடுகள்தான்.

பலர் பெரிய தகுதிகளை கொண்டிருப்பர்; பல பட்டங்களைக் கொண்டிருப்பர்; ஆனால், முகத்தில் எந்நேரமும் விறைத்துப் போன உணர்வுகள்தான் வெளிப்படும். அன்பையும் மரியாதையையும் மற்றவர்களைக் கௌரவமாக பார்ப்பதையும் வெளிப்படுத்த தெரியாதவர்களாக காணப்படும் மனிதர்கள் பலர் சமுதாயத்தில் உலாவுகின்றனர். சமூகத்திலிருந்து விலகி வாழ்கின்ற அல்லது ஒதுங்கி வாழ்கின்ற மனிதர்களாக அவர்கள் வாழ்வதுண்டு. குழந்தைகளைப் பார்த்துக்கூட சிரிக்கத் தெரியாத அறிவாளிகளை சமூகம் என்ன செய்வது? பலர் தமக்கு தாங்களே ''சுய கர்வம்'' என்ற குகை அமைத்துக்கொண்டு அதற்குள் ஒளித்துக் கொள்கின்றனர். பகிரங்கமாக மக்கள் முன் வருகின்றபோது ஒரு போலியான முகத்தையே வெளிப்படுத்துகின்றனர். உணர்வுகளில் ஒரு தெளிவு இல்லை. உணர்வுகளை இதமாக வெளிப்படுத்துவமில்லை; மற்றவர்கள் அன்புரிமையுடனும் மரியாதையுடனும் வெளிப்படுத்தும் உணர்வுகளை அங்கீகரிப்பதுமில்லை. இது ஒரு வாழ்க்கைத் தோல்வி தான்; படித்தவர்கள் பலர் எதிர்கொள்ளும் இல்வாழ்க்கையிலான தோல்விகள், தொழில்புரியுமிடத்திலான புகழ்பெற முடியாத பின்னடைவுகள், சமூக பாராட்டைப் பெற முடியாத நிலைமைகள் என்பன இந்த உணர்வு நிலை சார்ந்த தகுதிப்பாடுகளுடன் தொடர்புடையன.

ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் கடையில் பணியாற்றும் சிப்பந்திகளும் போக்குவரத்து வாகனங்களின் ''கண்டக்டர்''களும் உணர்வுகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். தாமும் நேர்முறையான உணர்வு களை வெளிப்படுத்த வேண்டும். மாணவர்களுடன் ஆசியர்களும் வாடிக்கையாளர்களுடன் சிப்பந்திகளும் பயணிகளுடன் கண்டக்டர்களும் இதமான முறையில் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனரா? இதுபற்றி கருத்தாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

சில ஆசிரியர்களை மாத்திரம் ஏன் மாணவர்கள் அதிகம் விரும்புகின்றனர்? அறிவாளி என்பதால் மாத்திரமா? இல்லை! தம்மை நாகரிகமானவர்களாக அவர் உணர்வுகள் மூலம் அங்கீகரிக்கிறார் என மாணவர்கள் நம்புவதே காரணம்.

மற்றவர்கள் வெற்றிபெறுவதை விரும்புவதாக எந்த ஆசிரியர் உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்? மற்றவர்களை நம்புவதாக எந்த ஆசிரியர் காட்டிக் கொள்கிறார்? இந்த அடிப்படைகளில் தான் மிகப் பெரிய தகுதிகள் இல்லாத போதும் பல ஆசிரியர்கள் புகழ் பெற்று "பொன்னான மனிதர்"களாக வரலாறு படைத்துள்ளனர். புன்னகையும் கௌரவமளிப்பதான பார்வையும் சிறிய இனிய சொற்களும் நல்ல உணர்வுகளை பிரசவிக்கின்றன.

★ ஆசிரியர்கள் வகுப்பறையில் நல்ல மனிதர்களா?

ஆசிரியர்களது தொழிற்படும் களம்தான் வகுப்பறை. தங்களை விடவும் சிறந்தவர்களாகவும் தங்களைவிட ஆற்றல் மிக்கவர்களாகவும் தமது மாணவர்களை மாற்றுவதற்கான ஆசிரியர்களின் தொழிற்படு மையங்களாகவே வகுப்பறைகள் விளங்குகின்றன.

ஆசிரியர்கள் வகுப்பறைகளில் மாணவர்களுக்கு சில பாடங்களைக் கற்பிக்கும் போது தாங்களும் பல விடயங்களைக் கற்றுக் கொள்கிறார்கள். கற்பதில் சிறந்த முன்மாதிரிகளாகவும் ஆசிரியர்கள் விளங்க வேண்டும். குடத்தை எப்போதும் புதியதும் தூயதுமான நீரினால் நிரம்பிக் கொண்டிருந்தால்தான் அதிக தாகத்து டன் குடிப்பவர்க ளுக்கு தொடர்ந்து பயன்கிடைக் கும். இதேபோல் ஆசிரியர்களும் கற்பிக்கும் போது பல்வேறு பண்பா ட்டு வேறுபாடுகளும் குடும்ப நிலை வேறுபாடுகளும் ஆற்றல் வேறுபாடுகளும் கொண்ட பல்வகைமை கொண்ட மாணவர்களிடமிருந்தும் பலவற்றைக் கற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு கற்கக் கூடியது மாணவர்களது உணர்வு மற்றும் மனவெழுச்சி சார்ந்த பல வெளிப்பாடுகளிலிருந்து உய்த்தறியக்கூடிய


கல்வித் தரிசனம்

அவர்களது நிலைமைகளும் பிரச்சினைகளும் எதிர்பார்க்கைகளுமாகும்.

இவற்றுக்கு ஏற்ற வகையில் வகுப்பறையில் போதனை உபாயங்களை வடிவமைக்க வேண்டிய தேவைகள் பலவும் தற்போது அதி கரித்து வருகின் றன. ஒவ்வொரு ஆசிரியரும் வகுப்பறையுள் நுழைந்தபின் தமது மனதை தூய்மைப்படுத்திக்கொண்டு பின்வரும் கேள்விகளை கேட்டுக் கொள்ளுதல் அவசியமாகின்றது.

I நான் உணர்வதை அதேமுறையில் உண்மையாக மாணவர்கள் முன் வெளிப்படுத்துறேனா?

II மாணவர்கள் தமது உண்மையான உணர்வு நிலைகளை உள்ளபடியே வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்புக்களை வழங்குகிறேனா?

III பின்வருவன தொடர்பாக பிள்ளைகள் வகுப்பறையில் தமது உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு போதியளவு நேரம் வழங்குகிறேனா?

★ அவர்கள் நிறைவாக கற்றல்

★ நான் கற்பிக்கும் பாடங்களின் நிறைவு

★ நான் கற்பித்தலில் கையாள்கின்ற உபாயங்கள்

IV தனிநபர்களாக ஆளுக்கு ஆள் எவ்வாறு உண்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குரிய சிறந்த முன்மாதிரியாக நான் நடந்து கொள்கிறேனா?

V மாணவர்கள் வகுப்பறைகளில் தமது சகபாடிகளின் நலன்களில் அக்கறையுடன் நடந்து கொள்வதை காண முடிகின்றதா?

VI வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் பிரதானமான முடிவுகளை யார் மேற்கொள்கின்றனர்?

★ இளம்மாணவர்கள் இதில் பங்கேற்கின்றனரா?

★ புத்திசாலித்தனமான, பொறுப்புமிக்க முடிவுகளை மேற்கொள்ளும் முறைமை மாணவர் அறிவார்களா?

★ தாம் கற்பது தொடர்பான தெளிவான குறிக்கோள்களை தீர்மானிப்பதற்கு உண்மையில் நான் உதவி செய்கிறேனா?

இத்தகைய வினாக்களை கேட்பதற்குரிய மனத்தூய்மை, மனத் தெளிவு, சுயநேர்மை, தொழில்சார் ஒழுக்கம் என்பவற்றை ஆசிரியர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

★ மாணவர்கள் தமது மனவெழுச்சிகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்?

"மாணவர்கள் ஒழுங்காக இருப்பதில்லை, படிப்பதில் பெரிய நாட்டம் ஏதுமில்லை, வகுப்பறைகளில் முரண்பட்ட நடத்தைக் கோலங்களையே வெளிப்படுத்துகின்றனர்.''

இத்தகைய கருத்துக்களை ஆசிரியர்கள் வெளிப்படையாக கூறுவதில்லை. ஆனால், மனதில் அடிக்கடி உணர்கிறார்கள்.

மாணவர்கள் தாம் நினைப்பதையும் உணர்வதையும் வெளிப்படையாக சொல்வதற்கு வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் பொருத்தமான வாய்ப்புக்கள் வழங்கப்படுவதேயில்லை. இதனால் தமது செயற்பாடுகள் அல்லது நடத்தைகள் மூலம் தமது உணர்வை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றனர். பல தடைகளை வகுப்பறைகளில் உருவாக்குகின்றனர். ஆசிரியர் கற்பிக்கும் போது;

★ தமது பென்சில்களை பலதடவை கூராக்குகின்றனர்.

★ புத்தகங்களை இரண்டு அல்லது மூன்று முறை கீழே கைதவற விடுகின்றனர்.

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

★ படக்கதையுள்ள புத்தகத்தை புரட்டுகின்றனர்.

★ சகபாடியுடன் ஏதோ உரையாடுகின்றனர்.

★ தலையைக் குனிந்தபடி ஏதோ (தமக்குள்) சொல்கின்றனர்.

இவையெல்லாம் உணர்வுகள் மூலம் மாணவர்தம் கருத்துக்களை அல்லது விருப்பமின்மையை வெளிப்படுத்தும் வழிமுறைகளாகவேயுள்ளன.

ஆசிரியர்கள் பின்வரும் மாதிரியான கேள்விகளை தமக்குள் தெளிவாக கேட்க வேண்டும்.

I இந்த நிலைமைகளை எந்த முறைகளினால் குறைப்பது?

II இந்த நிலைமையில் உணர்ச்சிவசப்படாமல் எவ்வாறு நிதானமாக நடந்து கொள்வது?

III இத்தகைய நிலைமைகளில் எத்தகைய உபாயங்களை எத்தகைய திறன்களை கையாள்வது?

IV தனது பொறுப்புணர்வை எவ்வாறு சுயமாக மதிப்பிட்டுக்கொள்வது?

V எதிர்காலத்தில் மாணவர்கள் கருத்தையும் உணர்வையும் நேர்முறையில் எவ்வாறு அறிவது?

ஆசிரியர்கள் போதுமான பாட அறிவை மாத்திரம் கொண்டிருந்தால் போதுமா? ரியூசன் நிலையத்து ஆசிரியர்களைப் பொறுத்தவரை மாத்திரம் சிலவேளை இந்த பாட அறிவு மாத்திரம் போதுமானதாகலாம்.

பாடசாலைகளில் மாணவர்களை தொடர்ச்சியாக கற்பிப்பதிலும் அவர்களது ஆளுமையை வளர்ப்பதிலும் விழுமிய பண்புகளை மேம்படுத்துவதிலும் கூட ஆசிரியர்கள் அக்கறை கொள்கின்றனர்.

இதனாலேயே உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் கையாளும் திறன்களும் ஆற்றல்களும் ஆசிரியர்களுக்கு அவசியமாகின்றன.


★ ஆசிரியர்கள் எவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்?

நல்ல ஆசிரியர்கள் என்று மாணவர்கள் குறிப்பிடும் ஆசிரியர்கள் பொதுவாக உற்சாகமானவர்களாகவும் மாணவர்களில் அன்பு செலுத்துபவர்களாகவும் மாணவர் நலன்களை மதிப்பவர்களாகவும் ஓரளவு நகைச்சுவை உணர்வுடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மாணவர்களது உணர்வுகள் முரண்பாடாக வெளிவராதவாறு வகுப்பறையை நிர்வகிப்பதற்கு ஆசிரியர்கள் பின்வருவனவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியதவசியமாகும்.

I மாணவர்களுடன் உடன்பாடான உறவு முறையை ஆசிரியர்கள் பேண வேண்டும்.

II ஆசிரியர்கள் தமது செயற்பாடுகளில் எப்போதும் ஒழுங்கான ஒழுக்க நடைமுறைகளைக் கையாள வேண்டும்.


24
பேராசிரியர் மா.சின்னத்தம்பி

III மாணவர் நலன்களில் உண்மை யான அக்கறையை இயன்றளவு காட்டுதல் வேண்டும்.

பெரும்பாலான ஆசிரியர்களுக்கு அறிவு சார்ந்த பயிற்சியும் வழிகாட்டலும் வழங்கப்படுமளவுக்கு சமூக- மனவெழுச்சி தொடர்பான பயிற்சி வகுப்புக்களும் பயிலரங்குகளும் நடத்தப்படுவதில்லை.

மனப்பக்குவமும் சிந்தனைத் தெளிவும் கற்பித்தலில் உண்மையான விருப்பமும் இளைஞர் உளவியலறிவும் கொண்டவர்கள் மாத்திரம் கற்பித்தல் தொழிலுக்கு வருவதில்லை. அது உறுதிப்படுத்தப்படுவதிலும் எவருக்கும் பெரிய அக்கறை ஏதுமில்லை.

கற்பிப்பதற்கான தேசிய சான்றிதழ் வழங்கும் நடைமுறைகள் ஏதுமில்லை. எவரும் யாருக்கும் கற்பிக்க முடியும். மாணவர்கள் ஏற்றுக் கொண்டால் போதும். தேசிய அல்லது சமூக கண்காணிப்பு எதுவுமில்லை; எதுவும் தேவையுமில்லை.

இதனால் மாணவர்கள் சமகாலத்தில் பல்வேறு வகையான ஆசிரியர்களிடம் பல இடங்களில் கற்கின்றனர். மாணவர்களுக்கு எந்த ஆசிரியரை முன்மாதிரியாக பின்பற்றுவது என்பதில் நிறைய குழப்பங்கள் உள்ளன. இத்தகைய முரண்பட்ட நிலைமைகளை உருவாக்கும் வகையிலேயே எமது கல்வி முறைமை செயற்பட்டு வருகின்றது.

பாடசாலை ஆசிரியர்கள் தமது முழுக்கவனத்தையும் ஆற்றலையும் பள்ளி மாணவர்கள் மீது செலுத்துவதற்குரிய ஊக்கத்தை அளிப்பதற்கேற்றதான பணச் சம்பளங்கள் மற்றும் மெய்வேதன ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதேயில்லை. சிறந்த பள்ளி ஆசிரியர் சிறந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியரைவிட பத்து மடங்கு குறைந்த சம்பளங்கள் பெறும் நிலைமைகளும் உள்ளன.

இதனால் சிறந்த பள்ளி ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்களது உணர்வு நிலைகளில் அக்கறை காட்டுவதை விடவும் சிறந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியராக தம்மை மாற்றிக் கொள்வதில் அக்கறை காட்டுகிறார்கள். நிலவுகின்ற கல்வி முறைமையும் ஏற்பாடுகளும் இதனை அதிகம் ஊக்குவித்து வருகின்றன.

ஆசிரியர்களில் அதிக திறமையானவர்கள், விரக்தியுடனும் வறுமை நிலைமையுடனும் பணிகளில் இருப்பதாலும் எதிர்பார்க்கப்படும் மாதிரிகளில் மாணவர் மீது அவர்கள் உண்மை நாட்டம் கொள்வதில்லை.

★ முடிவுரை

பாடசாலை மற்றும் கல்விக் கொள்கைகளை வடிவமைப்பவர்கள் அதிக தகுதிமிக்கவர்களை தெரிவு செய்ய வேண்டும்; போதிய சம்பளத்தையும் வசதிகளையும் வழங்கி ஆற்றல் மிக்கவர்களை மாத்திரம் பாடசாலை களில் நியமிக்க வேண்டும். தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கு சமமான சமூக, பொருளாதார அந்தஸ் தை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆசிரியர்களுக்கு போதியளவான சமூக- மனவெழுச்சி சார்ந்த செயலமர்வுகளை ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படியெல்லாம் செய்வதன் மூலம் வகுப்பறைகளை உணர்வு ரீதியில் இடைவினையுறவு கொள்ளும் சிறந்த மையங்களாக மாற்றுவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகர் மாமுனிவரின் சுப்பிரமணிய சுவாமி பாதம்




**ஆன்மீகம் 87**

நெல்லை மண்ணில் திருக்குறுங்குடி எனும் ஊர் இருக்கின்றது. இங்கு மகேந்திரகிரி, கெந்தமாபர்வதங்களிலிருந்து உற்பத்தியாகி ஓடிவரும் தெய்வீகத் தீர்த்தங்களையுடைய நதி, அத்தியடி, குடமாடி என்ற பெயருடையது. இந்த ஆற்றிலே ஒரு பெரிய பாறை ஒன்று இருக்கிறது. இதைப் பார்ப்பதற்கே விந்தையாக இருக்கும் இந்தப்பாறைக்கடியில் பெரும் எண்ணிக் கையில் இன்றும் சித்தர்கள் தவம் இருப்பதாகப் போகர் நூலில் குறிப்பிட்டிருக்கிறது. இந்தப் பாறையின் மீது, திரௌபதி சமாதி என்று செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடம் அத்தி தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. அக்கினி தீர்த்தம் என்ற பெயரும் இதற்கு உண்டு.

இந்தத் தீர்த்தத்தில் யார் ஒருவர் நாற்பத்தெட்டு நாட்கள் புனித நீராடிப் போகர் அருளிய தேவியின் திருமந்திரத்தை ஜெபித்து தேவியை உள்ளன்புடன் பக்தியோடு வழிபாடு செய்கிறார்களோ, அவர்களுக்கு அவரின் சதாசிவ நிலையை பெறும் பேறு உள்ளது. இதுவே போக முனிவரின் ஆதி சமாதி ஆகும்.

போகர் வாழ்ந்த காலத்தில் இங்கு வெள்ளை யானைகள் வாழ்ந்ததாகச் சில நூல்கள் குறிப்பிடுகின்றன. இங்கிருந்து மகேந்திரகிரி செல்ல வழியிருக்கிறது. அப்படிச் சென்றால் போகர் மகரிஷியை தரிசிக்கலாம்.

இதற்கு மேல் சென்றால் ரோகிணி தீர்த்தம் அதில் நீராடி அதற்கு அப்பாலுள்ள சங்கு தீர்த்தத்தில் புனித நீராடி



சுப்ரமணிய சுவாமி பாதம்

பிறகு கஜேந்திர தீர்த்தம், திரு அண்ணாமலை தீர்த்தம் ஆகிய வகைகளில் நீராடி அங்கிருந்து பார்த்தால் தெரியும் அண்ணாமலை மொட்டு என்ற சிகரம் இதைக் கண்ணாரக் கண்டு களித்து, மேலும் பயணித்து பஞ்சபாண்டவர் தீர்த்தம், பிறகு வள்ளி தீர்த்தம் ஆகியவற்றில் நீராடி விட்டு மறுபடியும் மூன்று மணிநேரம் கடும் பயணம் மேற்கொண்டு கப்பல் பாறையை அடை யலாம் அதன் அருகில் உள்ள சிறுகுன்று போன்ற மாபெரும் புற்றையும் வணங்கி இறுதியாக சமாதி பாதம் என்னும் சுப்பிரமணி சுவாமி பாதம் இருக்கும் இறையருள் ஸ்தலத்தை அடையலாம்.

இங்கு ஒரு பத்துஅடி உயரமுள்ளஒரு பெரும் பாறையில் இரண்டு பாதச் சுவடுகள் மண்ணிலே பதிக்கப்பட்டு உள்ளது. அதன்பிறகு பாறையில் பாதம் போன்ற உருவம் காட்சியளித்த இப்பாறையின் அடியில் போகர் பெருமான் ஐந்துவகை காளியாகவும் ஐந்துவகை அஷ்டலட்சுமிகளாகவும் ஆஞ்சநேயர், ராமபிரான் எண்ணாயிரம் கன்னிதேவதைகள் அருள்மிகு சுப்பிரமணிய சுமாமியுமாகிக் கோயில் கொண்டுள்ளதாக ஆசான்மூலம் அறிந்தோம். சுப்பிரமணியசுவாமி பாதத்தைப் போகரின் பாதமாகவும் சான்றோர்கள் கருதுகின்றார்கள்.

பழனியில் பழனி, ஆண்டியை நலபாஷணத்தில் போகர் உருவாக்கியதாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆதலால் முருகன் வேறு போகர் வேறல்ல என்று முன்பு 'ஆசான் கூறியதைக் கேட்டதும் ஒருமுறை அவரைப்பற்றி அறிந்துகொள்ள- என் குழப்பம் தீர அவரிடமே சென்றுகேட்டேன்... தொடரும்

**அன்னை சித்தர்**
**இராஜ்குமார் குருஜி**

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

ஒருநாட்டில் இரு இன மக்கள் தங்களுக்குரிய வெவ்வேறு நிலப் பரப்புகளில் வாழ்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். ஓர் இனத்து மக்கள் அந்நாட்டில் 70 சதவீதம் உள்ளனர் என்றும் மற்றொரு இனத்து மக்கள் 30 சதவீதம் உள்ளனர் என்றும் வைத்துக் கொள்வோம். அந்நாட்டில் ஒற்றையாட்சி முறைமைதான் அமுலிலுள்ளது என்றும், அதாவது அந்நாட்டின் இறையாண்மை அதிகாரம் இரண்டு அரசுகள் இடையே பகிர்வு செய்யப்பட்டு செயற்படும் கூட்டாட்சி முறைமையின்படி அந்நாட்டின் அரசாட்சி,



என்பது 70 சதவீதம் உள்ள இனத்து மக்களின் ஆட்சியாகத்தானே இருக்கும்? அப்பொழுது அந்நாட்டின் 30 சதவீதம் மக்கள் கொண்ட இனத்தைப் பொறுத்தவரை தங்களுக்கான மக்களாட்சி நடைபெறுவதாக அவர்கள் எடுத்துக்கொள்ள முடியுமா? முடியாது. ஏனெனில் 70 சதவீதம் உள்ள இனத்து மக்களின் சட்டமும் ஆட்சியும்தான் அவர்களை ஆட்சி செய்யும்.

இப்படியான நிலைமை உள்ள நாட்டில் 30 சதவீ

அதிகாரம் செயற்படுத்தப்படவில்லை என்றும் வைத்துக்கொள்வோம். இந்நிலையில் அந்நாட்டில் சட்டமன்றத்திற்கும் நிர்வாகத் துறைக்கும் தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது என்னநிலைமை இருக்கும்? 70 சதவீதம் உள்ள இனத்து மக்களின் பிரதிநிதிகள்தானே சட்டமன்றத்தில் பெரும்பான்மையினராக தேர்ந்தெடுக்கப்படுவர்? அவர்கள்தானே நிர்வாகத் துறைக்கும் தேர்ந்தெடுக்கப்படுவர்? இவ்வாறு அரசின் இரு துறைகளையும் கட்டுப்படுத்துபவர்களின் அதிகாரத்தினாலேதானே, நீதித்துறையும் கைப்பற்றப்படும்?

எனவே, 30 சதவீதம் மக்கள் தொகை கொண்ட இனம், என்னதான் ஒருமித்து பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தாலும் அவர்கள் அந்நாட்டின் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற முடியாது. அதேபோன்று நிர்வாகத் துறைக்கும் தேர்வு செய்யப்பட்டு ஆட்சி உரிமை பெற முடியாது.

இந்நிலையில் அந்நாட்டின் மக்களாட்சி

தம் மக்கள் கொண்ட சிறிய தேசிய இனத்தார் பெரிய தேசிய இனத்தாருனட சேரந்து அரசியல் வாழ்வு வாழ இயலுமா? வாழ இயலுமா? வாழ முடியாது. எப்பொழுது முடியும் எனில் அவர்களது நில, மொழி, பண்பாட்டு, பொருளியல் உரிமைகளை உறுதி செய்யும் வகையில் அவர்கள் தங்களுக்கான ஒரு மாநில அரசுரிமை என்ற தன்னாட்சியுரிமை பெற்றிருப்பதுடன் அந்நாட்டின் நடுவண் அரசும் அவர்களது நலன்களை உறுதி செய்யும் முறையில் அவர்களின் சமபங்கேற்புடன் அமைந்த ஒரு அரசாகவும் அமையப் பெற்றிருக்குமாறு இரு அரசுகளின் ஆட்சிமுறைகள் கொண்ட ஓர் உண்மையான கூட்டாட்சிமுறை உறுதிசெய்யப்பட்டிருக்கும்; பொழுதுதான் 70 சதவீதம் உள்ள இன மக்களுடன் கூட்டுச் சேர்ந்து வாழ முடியும்.

அதாவது குறிப்பிட் துறைகளில் தன்னாட்சி செய்துகொள்ளும் உரிமையும் மற்ற துறைகளில் பிற இனத்தாரோடு சம அளவில் பிரதிநிதித்துவம் பெற்று நடுவண் அரசின் ஆட்சியில் பங்கு பெறும் உரிமை என்ற இரண்டு அரசியல் உரிமைகள் சிறுபான்மை தேசிய இனத்து மக்களுக்கு உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இந்த இரண்டு அரசியல்உரிமை பாதுகாப்புகளும் சிறிய தேசிய இன மக்களுக்கு மறுக்கப்பட்டுவிடுமேயானால் அம்மக்கள் வாக்குரிமை வழங்கப்பட்டிருப்பதானாலேயே அவர்களுக்கு அந்நாட்டில் உண்மையான மக்களாட்சி கிட்டிவிட்டதாக கூற முடியாது. அந்நிலையில் அந்நாட்டில் தேர்தல் ஒன்று நடப்பதாலேயே அந்த தேசிய இன மக்களின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படுவதாகவும் கருத முடியாது.

ஒரு எதிர்மறையான உதாரணத்தின் மூலம் முதலில் குறிப்பிட்டுள்ள தேசிய இனத்தாரின் தன்னாட்சி என்ற ஒரு கூட்டுரிமையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளலாம். தற்போது இந்தியாவில் தமிழர்களின் மாநிலமாக தமிழ்நாடு என்றும்மலையாளிகளின் மாநிலமாக கேரளம் என்றும் இரு மாநிலங்கள் உள்ளன. கேரள மக்களிடம் உங்களுக்கு ஒரு தனி மாநிலம் தேவையில்லை என்றும் நீங்கள் தமிழகத்துடன் இணைந்துகொள்ளுங்கள் என்றும்இரண்டு மாநிலங்களும் இணைந்த ஒரு மாநிலத்திற்குள் தேர்தலில் பங்கெடுத்து மக்களாட்சி முறையில் ஆட்சி செய்து ஒற்றுமையாக வாழலாம் என்றும் உங்களது சட்டமன்றத் தொகுதி எண்ணிக்கைகள் அப்படியே தொடரும் என்றும் கூறினால் எந்தவொரு மலையாளியாவது ஒப்புக்கொள்வாரா? எந்தவொரு கேரளக்கட்சியும் சர்வதேசியம் பேசும் கம்யூனிஸ்ட் உட்பட ஒப்புக்கொள்ள மாட்டா. ஏனெனில் கேரளம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டால் மலையாளிகள் தங்களுக்கான மாநில அரசு என்ற தன்னாட்சி கூட்டுரிமையைத் தமிழர்களிடம் இழந்துவிடுவர் அல்லவா? அந்நிலையில் தமிழகம்- கேரளம் இணைந்த ஒரு மாநிலத்தில் தேர்தல் நடப்பதும் அதில் பங்குபெற்று வாக்களிக்கும் உரிமை பெற்றிருப்பதும் மலையாளிகளுக்கு முக்கியமானதாக இருக்காது. ஏனெனில் மலையாளிகளின் கூட்டு நலன்களை பாதுகாக்கும் அவர்களுக்கான ஒரு மாநில அரசு என்ற கூட்டுரிமைதான் மற்ற உரிமைகளைக் காட்டிலும் அவர்களுக்கு உயர்வான உரிமையாகும். அதனை இழந்துவிட்டப் பிறகு நடத்தப்படும் மேற்குறிப்பிட்டவாறான ஒரு ஆட்சி முறை என்பது அவர்களைப் பொறுத்தவரை மக்களாட்சியாக இருக்காது. தங்களது நலன்களை பாதுகாத்திடும் தங்களுக்கான ஓர் அரசு என்ற கூட்டுரிமைதான் மற்ற உரிமைகளுக்கும் மேலான முக்கியமான உரிமை என்பதை மலையாளிகள் சுட்டிக்காட்டுவர் அல்லவா?

எனவே, பல இனத்தினர் சேர்ந்து சேர்ந்து வாழும் ஒரு நாட்டில் ஓர் இனத்து மக்கள் அவர்களது கூட்டுரிமைகளை பாதுகாத்திடும் தங்களுக்கான மாநில அரசு என்ற உரிமையைப் பெற்றிருப்பது முக்கியமானது. மற்றொரு புறத்தில் அந்நாட்டிலுள்ள மற்ற இனங்கள் போன்ற நடுவண் அரசில் சம அளவில் பிரதிநிதித்துவம் பெற்று பங்கெடுப்பது என்பதும் முதன்மையானது. அந்த உரிமைகள் இரண்டு; சிறிய தேசிய இனத்து மக்களுக்கு மறுக்கப்படுமானால் அவர்கள் பெரிய தேசிய இனத்துடன் கூட்டாக அரசியல் வாழ்வு வாழ முடியாது. இவ்வாறு அந்த இரு முக்கிய உரிமைகளும் மறுக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களது வாக்குரிமை என்பதும் தனி மனித உரிமைகள் என்பதும் முக்கியமற்றவை என்பதுடன் அவர்களது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் பயனளிக்கத்தக்கவையாகவும் இருக்காது. தொடரும்

**ஆய்வாளர் சு. அருணாச்சலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்


546

## வீட்டிற்குப் போ

பிரம்மதத்தன் காசியை ஆண்ட காலத்தில் அங்கு சேனகர் என்ற மாபெரும் யோகியாக போதிசத்வர் அவதரித்திருந்தார். அதே சமயம் அந்நகரை அடுத்து இருந்த ஒரு கிராமத்தில் பிச்சை எடுத்துப் பிழைக்கும் ஒரு பிராமணன் இருந்தான்.

ஒருநாள் அவன் ஏதோ ஒரு ஊரில் பிச்சை வாங்கிக் கொண்டு காட்டு வழியே தன் ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்போது ஒரு அசரீரி வாக்கு "பிராமணா நீ இன்று வீட்டிற்குப் போகாமல் இருந்தால் இறந்துவிடுவாய். நீ வீட்டிற்குப் போனாலோ





உன் மனைவி இறப்பாள்" என்று கூறியது.

பிராமணன் சுற்றிலும் பார்த்து 'யாருமே இல்லாதது கண்டு தன்னை எச்சரித்தவன் யாராவது யட்சனோ கந்தர்வனோ அல்லது பிசாசோ' என்று சந்தேகப்பட்டான். அவன் மனத்தில் பயம் ஏற்படவே எப்படியாவது சட்டென வீட்டிற்குப் போய் விட வேண்டும் என்று அவன் துடித்தான். ஆனால், வீட்டிற்குப் போனால் அவன் மனைவி இறந்துவிடுவாளாமே. இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் அவன் தவித்தான்.

அவன் நகருக்குள் நுழைந்து ஒரு வீதி வழியாகப் போனபோது சேனகரான போதிசத்வர் மக்களுக்கு தர்ம உபதேசம் செய்து கொண்டு இருப்பதைக் கண்டான். அவர் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருக்க மக்கள் அவரைச் சுற்றிலும் கூடி இருந்தார்கள்.

இந்தப் பிராமணனும் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு போதிசத்வர் கூறியதைக் கேட்கலானான். போதிசத்வர் தம் பேச்சை முடித்ததும் மக்கள் கூட்டம் கலைந்து சென்றது.

ஆனால், அந்தப் பிராமணன் மட்டும் ஆடாமல் அசையாமல் மரம் போல நின்றான்.

அவனுக்குக் காட்டில் கேட்ட அசரீரி வாக்கு மிகுந்த குழப்பத்தைத்தான் உண்டாக்கி இருந்தது. எப்படிப் பார்த்தாலும் கணவன் மனைவி இருவருள் யாராவது ஒருவர் இறந்தாக வேண்டும். இருவரும் இறக்காமல் இருக்க என்ன வழி என்று காணத்தான் அவன் துடித்தான்.

அவனைக் கண்ட போதிசத்வர் தன்னருகே வரும்படி அவனுக்குச் சைகை செய்தார். பிராமணனும் அவரருகே போய் அவரை வணங்கி எழுந்து தலைகுனிந்து நின்றான். போதிசத்வரும் "நீ எதற்காக இப்போது வேதனைப்படுகிறாய்?" என்று கேட்டார். பிராமணனும் காட்டில் தன்னை யாரோ எச்சரித் ததைக்கூறி இப்போது நான் என்ன செய்வேன்? வீட்டிற்குப் போனால் என் மனைவி இறந்து விடுவாளாம். போகா விட்டாலே நான் இறந்து விடுவேனாம். இருவரும் இறக்காமல் இருக்க ஏதாவது வழி கூறுங்கள் என வேண்டினான். அப்போது போதிசத்வர் "நீ அந்த எச்சரிக்கையைக் கேட்குமுன் என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று கேட்டார். "நான் ஓரிடத்தில் உட்காந்து பையிலிருந்த உணவை எடுத்துச் சாப்பிட்டேன்" என்றான்.

"சரி உன்னிடம் உணவு உள்ள பை இருக்கிறது. ஆனால், நீர் குடிக்கப் பாத்திரம் எதுவும் இல்லையே. தண்ணீர் எப்படிக் குடித்தாய்?" என்று போதிசத்வர் கேட்டார். "எதிரே ஒரு ஆறு இருந்தது. அங்கு போய்த் தண்ணீர் குடித்துவிட்டு வந்தேன்" என்றான் பிராமணன்.

"அப்படி யானால் நீ உணவு சாப்பிட்டு விட்டு பையை அதே இடத்தில் விட்டுவிட்டு ஆற்றிற்கு போனாய். அந்த பையில் உணவு மீதமாகி இருந்ததா?" என்று போதிசத்வர் அவனைப் பார்த்துக் கேட்டார்.

அவனும் "ஆமாம் பையில் இருந்ததில் பாதியை நான் உண்டேன். மிகுந்ததைக் கட்டி எடுத்துக்கொண்டு போய் மனைவியிடம் கொடுக்கப் போகிறேன். இதோ அந்தப்பை" என்று காட்டினான்.

"நீ நதிக்குப் போனபோது பையின் வாயைக் கட்டவில்லையே" என போதிசத்வர் கேட்டார். "கட்டவில்லைதான்" எனப் பிராமணன் பதிலளித்தான்.

"அப்படியானால் நதியிலிருந்து திரும்பி வந்துதான் பையின் வாயைக் கட்டினாய். கட்டுமுன் அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்தாயா?" என்று அவர் கேட்டார்.

அவனும் "பார்க்கவில்லை. அப்படியே கட்டி எடுத்து வந்தேன். இதற்குப் பிறகுதான் என்னை எச்சரிக்கும் குரல் என் காதில் விழுந்தது" என்றான்.

போதிசத்வரும் "அப்படியானால் நீ ஆற்றில் போய்த் தண்ணீர் குடித்தபோது பை இருந்த இடத்தில் ஏதோ நடந்திருக்கிறது. அநேகமாக ஒரு பாம்பு உன் பைக்குள் போயிருக்கிறது என்றே நான் நினைக்கிறேன். அதைக் கவனித்த யட்சனோ தேவதையோ உன்னை எச்சரித்தது. நீ வீட்டிற்குப் போகாவிட்டால் மறுபடியும் பசிக்கும் போது பையைத் திறப்பாய். அப்போது அதிலிருக்கும் பாம்பு உன்னைத் தீண்டிவிடும். நீயும் இறந்து போவாய். நீ பையைத் திறக்காமல் வீட்டிற்குப் போனால் முதலில் பையை உன் மனைவியிடம் தான் கொடுப்பாய். அவளும் அதை ஆவலுடன் திறப்பாள். அப்போது பாம்பு அவளைக் கடிக்க அவள் இறந்துவிடுவாள். இதுதான் விடயம்" எனக்கூறி அப்பையைத் தான் உட்கார்ந்திருக்கும் இடத்தருகே வைக்கும்படி அந்த பிராமணனிடம் சொன்னார்.

பிராமணனன் அப்போதுதான் தன் பைக்குள் பாம்பு புகுந்திருக்கிறது என அறிந்து திடுக்கிட்டான். போதிசத்வர் கூறியபடியே உடனேயே அவர் பக்கத்தில் வைத்து போதிசத்வர் என்ன செய்கிறார் எனப் பார்க்கலானான்.

அப்போது அவ்வழியே சென்ற ஒரு பாம்பாட்டியை அவர் கூப்பிட்டு பையிலுள்ள பாம்பைப் பிடிக்கச் சென்னார். அவனும் பையின் வாயை அவிழ்த்து சீறி வந்த நல்ல பாம்பைப் பிடித்துக் கொண்டு போய்விட்டான்.

அதன் பிறகு போதிசத்வர் பிராமணனிடம் "நீ இனிமேல் பயமில்லாமல் உன் வீட்டிற்குப் போகலாம்" என்றார்.

பிராமணன் அவருக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவித்து கவலையை விடுத்துத் தன் வீட்டிற்குச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையரசு பிழையான பாதையில் பயணிப்பதை இராஜதந்திரிகளின் கருத்துகள் சுட்டிக்காட்டுகின்றன

## சுரேஸ் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் மிகவும் தவறான பாதையில் பயணித்துக் கொண்டு, தமிழர்களுக்கு அநீதிகளை தொடர்ந்தும் இழைத்துக் கொண்டிருப்பதை சர்வதேசம் சமகாலத்தில் உணரத் தொடங்கியிருப்பதன் வெளிப்பாடே எரிக்சொல்ஹெய்ம் மற்றும் லீகுவான்யூ போன்றவர்களின் கருத்துக்கள் வெளிப்படுத்துவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவும், இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை தொடர்பாகவும் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் லீகுவான்யூ போன்றோர் தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஒரு மத்தியஸ்தராக செயற்பட்டவர் எரிக்சொல்ஹெய்ம், தமிழ் மக்கள் எவ்வாறான ஒடுக்குமுறைக்குள் வாழ்கிறார்கள் என்பதை அவர் நன்றாக அறிவார். அவரே இதனை குறிப்பிட்டிருக்கின்றார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், புலம்பெயர் தமிழர்களும் ஒன்றிணைந்து சாத்வீக போராட்டங்களை நடத்த வேண்டும்.

அவருடைய கருத்துக்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்கள் சார்பில் வரவேற்கின்றது. நாம் எமது உரிமைகளுக்காக போராடாத வரையில் எமக்கான உரிமைகள் கிடைக்கப் போவதில்லை. மேலும் இலங்கை அரசாங்கம் எதனையும் மிகச் சுலபமாக தமிழர்களுக்கு வழங்கப் போவதுமில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதேபோன்று சிங்கப்பூர் நாட்டை உருவாக்கிய பெருமைக்குரியவர்களில் ஒருவரான லீகுவான்யூ கூறியதாவது,

இலங்கை ஜனாதிபதி ஒரு பௌத்த சிங்கள தீவிரவாதி. அவரை திருத்த முடியாது.

யுத்தம் நிறைவடைந்த போதும், வடகிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கொடுக்கப்படவில்லை. இந்த நிலையில் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக தொடர்ந்தும் போராடுவார்கள்.

அவர்கள், உரிமைகள் மறுக்கப்பட்ட தேசத்தில் அடங்கி வாழ்பவர்கள் அல்லர் என்றார். இவரே, இலங்கை போன்று சிங்கப்பூர் நாட்டை நான் உருவாக்க வேண்டும் என முன்னர் கூறியிருந்தார்.

இன்று அவரே, இலங்கை போன்ற மோசமான ஒரு நாடு இல்லை. அங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது ஒரு இன அழிப்பு என்றும் இப்போது கூறியுள்ளார்.

எனவே, சர்வதேசத்தில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்கள் இருவருடைய கருத்துக்கள் மூலம் இலங்கை அரசாங்கம் மிகவும் பிழையான பாதையில் சென்று கொண்டிருப்பதை புலப்படுத்தியிருக்கின்றது.

எனவே, அரசாங்கம் தமக்குச் சாதகமாக கூறப்படும் கருத்துக்களை மட்டும் கூறி பெருமைப்படுவதை விடுத்து அவர்களுக்கு எதிரான விமர்சனங்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அதனடிப்படையில் இனப் பிரச்சினைக்கு அரசாங்கம் இனிமேலாவது தீர்வு கொடுக்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-2)

# இந்திய ஊடகவியலாளர்கள் 19 பேர் கொழும்பு வருகை

(கொழும்பு)


இந்திய ஊடகவியலாளர்கள் 19 பேர் கொழும்புக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை அரசாங்க தகவல் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் வருகை தந்த இவர்கள் வடக்கு- கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்திய வீடமைப்புதிட்டம், இந்திய உதவியுடன் இடம் பெறும் அபிவிருத்தி திட்டங்களைப் பார்வையிடுவார்கள் என கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் மாலை சந்தித்த இந்திய ஊடகவியலாளர்கள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் சந்தித்து உரையாடினர்.

ஒருவார காலம் இங்கு தங்கியிருக்கும் இவர்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு சென்று துறைமுகம், மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றையும் பார்வையிடவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் கூறியுள்ளது.

அத்துடன், இவர்கள் கொழும்பு தெற்கு புதிய துறைமுகத்தை நேற்று காலை பார்வையிட்டதாக கொழும்பு தகவல்கள் குறிப்பிட்டன. (அ-2)



மார்க்கண்டு சுவாமிகள் சபையால் இந்து அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழா பிரான்பற்றில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் சபைத் தலைவர் ந.சண்முகராஜா, பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் க.கிருஷ்ணானந்தா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# காவியுடை காடையர்கள் குறித்து தீர்மானம் எடுப்போம்

## விஜித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு முஸ்லிம் வணக்கஸ்தலத்தையாகிலும் தமது பொது பலசேனா அமைப்பு உடைத்தது என்பதை உறுதிப்படுத்தினால், தனது காவி உடையை கழற்றி விட்டு, இராணுவத்தில் இணைந்து கொள்ள போவதாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்திருந்தார்.

தற்போது ஞானசார தேரர் அதனை செய்வதற்கான காலம் கனிந்துள்ளதாக மஹியங்கனை பிரதேச சபையின் உறுப்பினரும் மகாவலி மகாவிகாரையின் விகாரதிபதியுமான வட்டரெக்க விஜித தேரர் தெரிவித்துள்ளார்.

மலையக முஸ்லிம் பேரவை ஏற்பாடு செய்திருந்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஞானசார தேரர் மஹியங்கனை விகாரைக்கு இரவில் சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் மறுநாள் முஸ்லிம் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தி, பன்றி இறைச்சியின் பாகம் வீசப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் மக்களின் நிகாப் உடைகளை பயன்படுத்தி கொள்ளையடிப்புச் சம்பவங்களில் பலர் ஈடுபடுகின்றனர். அதேபோல் பிக்குமாரின் காவி உடையை அணிந்து கொண்டும் கொள்ளையடிக்கின்றனர். நிகாப் உடையை தடைசெய்ய வேண்டும் என்ற யோசனைய்யை முன்வைப்பார்களேயானால், காவியுடையணிந்த காடையர்கள் குறித்தும் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டுமென அவர் மேலும்தெரிவித்துள்ளார். (அ-2)

# வடினாகல காட்டில் பெரும் தீ பரவல்!

(வடினாகல)

வெல்லவாய பிரதேசத்தின் வடினாகல காட்டுப்பகுதியில் பரவிய தீயினால் காட்டுப்பகுதிக்கு பெரும் சேதமேற்பட்டுள்ளதாக மொனராகல அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

காட்டின் பெரும்பகுதி தீயினால் அழிந்து நாசமாகிப் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

எனினும், தீ தற்போது முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது.

இராணுவத்தின் உதவியுடனேயே தீ முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் கனடா பங்கேற்க வேண்டும்

## ஸ்ரார் இணையத்தளம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டைப் புறக்கணிக்க கனடா எடுத்துள்ள தீர்மானம் கனடாவை தனிமைப்படுத்தி விடும் என்று ரொறண்ரோ ஸ்ரார் இணையத் தளம் தெரிவித்துள்ளது.

ரொறண்ரோ ஸ்ரார் இணையத் தளத்தில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ள கனேடிய படைத்தள கல்லூரியின் விரிவுரையாளர் அடம் சாப்னிக், இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்களைக் கருத்திற் கொண்டு, அந்த நாட்டில் நடைபெறும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக கனேடிய பிரதமர் ஹவாட் கடந்த இரண்டு வருடங்களாக அறிவித்து வருகிறார்.

எனினும் அவரின் இந்த அறிவிப்புக்கு அவுஸ்திரேலியா, பிரித்தானியா, நியூஸிலாந்து போன்ற நாடுகள் கூட இதுவரை தமது ஆதரவை வெளியிடவில்லை.

இந் நிலையில் கனடா தமது முடிவில் தனித்து போகக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கனடாவின் தீர்மானம் இலங்கையில் மாற்றங்களை கொண்டுவருவதற்கு காரணமாக இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு பயணிப்பதை போப்பாண்டவர் நிறுத்த வேண்டும்

## இரு பங்குத்தந்தையர்கள் கருத்து

**ஈழத்தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து போப் ஆண்டவர் பிரான்சிஸ் இலங்கை ஜனாதிபதியின் அழைப்பின்பேரில் இலங்கைக்குச் செல்வதை நிறுத்த வேண்டும் என்பது எங்களது திட்டவட்டமான முடிவு என பாளையங் கோட்டையின் இரு பங்குத்தந்தையர்கள் தெரிவித்துள்ளதாக இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அச்செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,**

உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்க சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் தலைவரான போப் ஆண்டவர் பிரான்சிஸ் தங்கள் நாட்டுக்கு வர வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று இலங்கைக்குச் செல்வது பற்றி பரிசீலித்து வருவதாக போப் கூறியிருப்பது இலங்கை, தமிழகம் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

மஹிந்தராஜபக்ஷவின் அழைப்பை போப் ஏற்கக்கூடாது என்கின்ற கோரிக்கை தமிழக தேவாலயங்களுக்கு உள்ளேயிருந்தும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

இதுபற்றி நம்மிடம் பாளையங்கோட்டை மகாராஜ நகர் யூததாதேயு ஆலயத்தின் பங்குத்தந்தை கூறுகையில்,

இலங்கையில் தற்போதும்கூட கிறிஸ்தவ தேவாலயங்கள், சிவ தலங்கள், இஸ்லாமிய தர்காக்கள் போன்றன தரைமட்டமாக்கப்பட்டு சிங்கள மயமாக்கும் வேலைகளை செய்கிறது இலங்கை அரசு.

தற்போது இலங்கை அரசுக்கு உலகம் முழுவதும் பெரும் எதிர்ப்பு எழுந்திருக்கிறது. இதனால் உலக அரங்கில் தனது முகமூடி கிழிவதைப் பொறுக்கமுடியாத அரசு போப் பிரான்சிஸ் தங்கள் நாட்டுக்கு வந்து சென்றால், தான் செய்த பாவங்கள் எல்லாம் மறைந்துவிடும் என நினைக்கிறார் போலும்.

உலகம் முழுவதும் அகதிகளாக அவதிப்பட்டு வரும் அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்த ஈழத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர் இலங்கைக்கு செல்லக்கூடாது என்பது எங்களது திட்டவட்டமான முடிவு. இதனை வலியுறுத்தி அனைத்து கத்தோலிக்க குருக்களையும் ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். இது திண்ணம் என்றார்.

இதேவேளை, பாளையங்கோட்டை ஆங்கிலத் தேவாலய குரு ஒருவர் கூறுகையில்,

பன்னாட்டு விசாரணையில் இருந்து தப்புவதற்காக எந்தவிதமான மோசடி வேலைகளைச் செய்யவும் இலங்கை அரசு தயங்குவது இல்லை. அதன் ஒரு பகுதியாகவே போப் ஆண்டவரை இலங்கைக்கு அழைத்துள்ளது.

இலங்கை அரசின் மோசடி வலையில் போப் ஆண்டவர் வீழ்ந்துவிடக் கூடாது. அவர் அங்கே சென்றால் அந்த நாட்டில் நடந்த போர்க்குற்றத்தை அங்கீகரிப்பதுபோல ஆகிவிடும் என்றார். தமிழர்களின் குரல் வத்திக்கானை எட்டுமா? என்றார். (அ-2)

# தேசிய அ.அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை-05 என்ற முகவரியை வதிவிடமாக கொண்ட மார்க்கண்டு விக்கினேஸ்வரி (677351330V) என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் கல்விளான் 2 ஆம் திட்டம் என்ற முகவரியை வதிவிடமாக கொண்ட சுந்தரம் தர்மராசா (590595276V) என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தமது அடையாள அட்டையை அலுவலகத்தில் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ள முடியும். (அ-5)

# புலிக்கொடியுடன் ஓடிய நபரை சர்வதேச பொலிஸ் தேடுகிறது

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பிரித்தானியாவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது மைதானத்தில் புலிக்கொடியுடன் ஓடிய சந்தேக நபரை மான்செஸ்டர் பொலிஸின் சர்வதேச குற்றச் செயல்கிளை தேடி வருவதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் கொழும்பு நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான லோகேஸ்வர்ன மணிமாறன் இன்னும் கைது செய்யப்படாது மறைந்து வாழ்வதால் விசாரணையை முடிக்க முடியவில்லை.

ஆகையால் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு அனுமதியளிக்குமாறு குற்றப்புலனாய்வு பிரிவினர் அனுமதி கோரினர்.

குறித்த வழக்கு விசாரணை கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.


இதேவேளை, புலிக்கொடியுடன் ஓடியவரின் கடவுச் சீட்டை பறிமுதல் செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய கடந்த ஜூலை மாதம் 30 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

யசோதர சடாச்சரமூர்த்தி எனும் பெயரில் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி பெற்றுக் கொண்ட கடவுச்சீட்டையே பறிமுதல் செய்யுமாறு நீதவான் கடந்த 30 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே வழக்கை ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி (நேற்று முன்தினம்) வரையிலும் நீதவான் ஒத்திவைத்தார். (அ-2)

# கிராண்ட்பாஸ் பிரச்சினை குறித்த விசாரணைகள் திருப்தி தருகின்றன

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ் சுவர்ண சைத்திய வீதியிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல் மீது ஆயுதங்களுடன் வந்த குழுவொன்றால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தமக்கு திருப்பதியளிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

குறித்த பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் அக்கட்சியின் உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் சமுகத்தை நோக்கிய மதம் சார்ந்த குரோதமான செயல்களைத் தடுத்து நிறுத்தவேண்டும். மேலும் இச்சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்விசாரணைகள் எமக்கு திருப்தியளிக்கின்றன.

இதேவேளை எமது கட்சியும் இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது என்றார். (அ-2)

# தென்பகுதி சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றுவது தவறு

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

தென்பகுதி சிங்கள மக்களை அழைத்துச் சென்று வடக்கில் குடியேற்றுவது பாரிய தவறு. அதனை விட மீள்குடியேற்றப் பகுதிகளில் பௌத்த கலாசாரத்தை பரப்ப முயற்சிப்பதும் பெரும் தவறு என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி ஆக்கிரமிப்புத் தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிராக நாம் குரல் கொடுத்து வரும் நிலையில் அந்த இராணுவ நிர்வாகம் தற்போது வெலிவேரிய வரைக்கும் சென்று விட்டது. நாடு முற்றுமுழுதாக இராணுவ நிர்வாகத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கில் இராணுவ நிர்வாகம் இடம்பெற்று வரும் நிலையில் அங்குள்ள மக்களது காணிகள் அபகரிக்கப்பட்டு தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்படும் மக்கள் குடியேற்றப்படுகின்றனர். இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இது பாரிய தவறான செயல். அத்துடன் மீள்குடியேற்றப் பகுதிகளில் இடம்பெறும் பௌத்த கலாசாரத்தைப் பரப்பும் செயற்பாடுகள் அதைவிட தவறானவை.

பௌத்தத்தை எவர் மீதும் திணிக்குமாறு புத்தர் கூறவில்லை. எனவே, பௌத்த மதம் ஏனைய மக்கள் மீது திணிக்கப்படுவதை உண்மையான பௌத்தன் என்ற வகையில் நான் கடுமையாக எதிர்க்கிறேன் என்றார். (அ-2)

# வெலிக்கடை சிறைக்கைதிகள் நால்வர் திருச்சி சிறைக்கு

(கொழும்பு)


இலங்கையின் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு தமிழக கைதிகள் தமிழகத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக பொலிஸாரின் பாதுகாப்புடன் இரண்டு பெண் கைதிகள் உட்பட நான்கு பேரும் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் அழைத்து செல்லப்பட்டு பின்னர் திருச்சி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்திய- இலங்கை நாடுகளுக்கு இடையிலான சிறைக் கைதிகள் மாற்று உடன்படிக்கையின் கீழ் தமிழகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

போதைவஸ்து உட்பட்ட குற்றங்களுக்காக கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்களில் இருவர் தமது தண்டனைக்காலமான சுமார் 10 வருடங்களில் பாதிக்காலத்தையும் சிலர் பெருமளவு காலத்தையும் கழித்துள்ளனர்.

இந்நிலையில் மீதமுள்ள தண்டனைக்காலம் முடியும் வரை இவர்கள் தமிழக சிறைகளில் தடுத்து வைக்கப்படவுள்ளனர். (அ-2)





திருநெல்வேலி கிழக்கு கலைமகள் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இவ் விளையாட்டுப் போட்டியில் சிறார்களின் விநோத உடை நிகழ்வு இடம்பெறுவதையும் நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட வாளையம்மன் கோயில் செயலாளர் செல்வகுமார் சிறுவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாருக்குள்ளே தெய்வம் ஒன்று- இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்!

ஒருகாலத்தில் தமிழர்கள் சைவம்– வைணவம்– பௌத்தம்– சமணம் எனப் பிரிந்துநின்று சண்டையிட்டார்கள். சைவர்கள் சமணர்களை வாதில்வென்று கழுவேற்றினார்கள் என்ற கதைகளும் உண்டு.

மனித சமூகத்தை ஒழுங்குபடுத்தஎழுந்ததே மதம் அல்லது சமயம். மதம் என்றால் கொள்கை என்று பொருள். இது எனது மதம் என்றால் இது எனது கொள்கை என்று பொருள். இன்னொருபொருளும் உண்டு. மதம் என்றால் வெறி, மதம் பிடித்த யானை என்றால் வெறிபிடித்த யானை என்று பொருள். இந்த இரண்டாவது பொருளிலேயே இன்றைய மதங்கள் காணப்படுகின்றன.

இலங்கைக்கு இன்னொரு பெயர் தருமதுவீபம். இங்கு உலகின் நான்கு முக்கிய மதங்கள் இருக்கின்றன. பௌத்தம், சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியனவே அந்த நான்கு மதங்களாகும்.

இருந்தும் இலங்கையில் கள், களவு, காமம், கொலை இவற்றுக்குப் பஞ்சமே இல்லை. பௌத்த தேரர் கொலை செய்கிறார் பௌத்த தேரர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். பௌத்த பிக்குகள் இளம் பிள்ளைகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கும் செய்திகள் வருகின்றன.

இன்று இலங்கையில் இந்த நான்கு மதங்களும் மோதிக்கொள்கின்றன. குறிப்பாக பௌத்தமும் இஸ்லாமும் மோதிக்கொள்கின்றன. மசூதிகள் என அழைக்கப்படும் இஸ்லாமிய வழிபாட்டுப் பள்ளி பௌத்தர்களால் தாக்கப்படுகின்றன. மசூதிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு மஞ்சள் அங்கி அணிந்த தேரர்களே தலைமை தாங்குகிறார்கள்!

தம்புள்ள என்ற இடத்தில் ஒரு கட்டடம் இருந்தது. அதனை முஸ்லிம்கள் மசூதியாகப்பயன்படுத்தினார்கள். அதனைப் பொறுத்துக்கொள்ளாத பௌத்தர்கள் அந்த மசூதியைத் தாக்கினார்கள். பௌத்த தேரர்களும் அதில் சேர்ந்துகொண்டார்கள். அவர்களுக்கு தம்புள்ள விகாரையின் முதன்மை மதகுரு இனாமுளுவ சுமங்கள தேரர் தலைமை தாங்கினார். குறிப்பிட்ட மசூதி பௌத்த புனித பூமியாக அறிவிக்கப்பட்ட பகுதியில் இருக்கிறது என்ற காரணத்துக்காகவே அது தாக்கப்பட்டது. தம்புள்ள குன்றில் 2,300 ஆண்டு கால வரலாற்றையுடைய விகாரை இருக்கிறது. இது மிகவும் புனிதமான விகாரை. அய்நா கல்வி, சமூக மற்றும் கலாசார நிறுவனம் இதனை வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாகப் பெயரிட்டுள்ளது.

குறிப்பிட்ட மசூதியை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று பௌத்த தேரர்கள் கோரிக்கை வைத்தார்கள். அதனை முஸ்லிம்கள் நிராகரித்துள்ளனர்.சுமங்கள தேரரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. இலங்கை ஒரு பல்மத, பன்முக கலாசாரங்களைக்கொண்ட பல்லின்மக்கள் வாழும்நாடு அல்லவா? இதற்கு சுமங்கள தேரரின் விடை என்ன முட்டாள் தனமான கோட்பாடு பற்றிப் பேசுகிறீர்கள்? இந்த நாட்டில் 14 மில்லியன் பௌத்தர்கள் வாழ்கிறார்கள். எத்தனை முஸ்லிம்கள் இங்கு வாழ்கிறார்கள்?

தாய்லாந்திலும் மியன்மாரிலும் பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். எனவே, அவற்றைப் பௌத்த நாடுகள் என்று அழைக்கிறோம். வத்திக்கானில் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். எனவே, நாங்கள் வத்திக்கானை ஒரு கத்தோலிக்க தேசம் என்று அழைக்கிறோம். இதே போல் மத்திய கிழக்கு நாடுகளில் முஸ்லிம்களின் பெரும்பான்மை உள்ளது. எனவே, அவற்றை இஸ்லாமிய நாடுகள் என்று அழைக்கிறோம்.

ஒரு மசூதி இருப்பது எப்படி பௌத்தர்களுக்கு இடையூறாக இருக்க முடியும்? அவரவர் தத்தமது வழிபாட்டு இடங்களில் வழிபாடு நடத்திவிட்டுப் போவதுதானே?

மசூதிகள் தாக்கப்படுவது போல் கிறிஸ்தவர்கள் வழிபாடு நடத்தும் ஆலயங்களும் தாக்கப்படுகின்றன. நாவல என்ற இடத்தில் ஒரு கிறிஸ்த்தவ ஆலயம் தாக்கப்பட்டுள்ளது. இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு இந்த இடங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன.

தாக்குபவர்கள் தங்களை சீருடை அணியாத காவல்துறை எனப் பகிரங்கமாக அறிவிக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் இப்படி மசூதிகளும் ஆலயங்களும தாக்கப்படும்போது காவல்துறை வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்கிறது. தாக்குதலைத் தடுக்கவே தாக்கியவர்களைக் கைது செய்யவோ காவலர்கள் முன்வருவதில்லை! சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது காவல்துறையின் கடமை. அதைக் காவல்துறை செய்வதில்லை. சட்டத்தைக் கையில் எடுப்போரைக் கண்டும் காணாமலும் விட்டுவிடுகிறது. இதனால் நாட்டில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகியுள்ளது.

இலங்கையில் முஸ்லிம்கள் பௌத்தர்களால் தாக்கப்படுகிறார்கள். வங்கதேசத்தின் தென்பகுதியில் பௌத்தர்கள் முஸ்லிம்களால் தாக்கப்படுகிறார்கள். கொக்ஸ் பஜார் மாவட்டத்தில் உள்ள பல கிராமங்கள் தாக்கப்பட்டுள்ளன. பெருமளவிலான குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளன.

கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்ற முறையில் கணக்குத் தீர்க்கப்படுகிறது. உள்ளூரில் பௌத்தர் ஒருவர் அவரது முகநூலில் அவதூறான படம் ஒன்றை வெளியிட்டு இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தியதாக வெளியான குற்றச்சாட்டுக்களை அடுத்தே அந்தக் கிராமங்களில் வன்முறைகள் வெடித்தன. பௌத்த விகாரை தீக்கிரையாகின.

ஒரு மக்களாட்சி நாட்டில் மத சுதந்திரம் எல்லோருக்கும் இருக்கிறது. அதில் பெரும்பான்மை சிறுபான்மை என்ற பாகுபாடு கிடையாது. இலங்கையில் பௌத்த மதத்துக்கு யாப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கலாம். பௌத்த மதத்தைப் பேணிக்காப்பது அரசின் கடமையாக இருக்கலாம். ஆனால், ஏனைய சமயத்தவரும் தங்கள் தங்கள் மதத்தைக் கடைப்பிடிக்க சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் 2,000 க்கும் மேற்பட்ட பௌத்த நிறுவனங்கள்இருக்கின்றன. ஜெர்மனியில் 3,000–4000 பௌத்த நிறுவனங்கள் உள்ளன. இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான பௌத்தநிறுவனங்கள்உள்ளன. இவற்றை கிறிஸ்த்தவர்கள் இடிக்கவெளிக்கிட்டால்நிலைமை எப்படி இருக்கும்?

பௌத்தத்தின் சிறப்புகளில் ஒன்று அதில் கடவுள் இல்லை. ஆன்ம கோட்பாட்டுக்கும் இடம் இல்லை. புத்தர் தன்னை ஒரு ஆசிரியராகவே கருதினார். எந்த அற்புதத்தையும் அவர் செய்து காட்டியதில்லை. புத்தர் தனது தந்தையை சாதாரண மனிதர் என்றும் தாயை சாதாரண பெண்மணி என்றும் கூறியுள்ளார். நான் கூறியவை உங்கள் பகுத்தறிவுக்கு ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார். ஆனால், காலப் போக்கில் பௌத்த் மாற்றமடைந்து போனது. இன்று புத்தர்கடவுளாக வழிபடப்படுகிறார்.

இன்றுஇலங்கையில்பௌத்தமதம்கருணை, உயிர்களிடத்தில் அன்பு போன்றவற்றைப் பரப்புவதற்குப்பதில் அது ஆட்சியைப் பிடிப்பதற்கும் பிடித்த பின்னர் அதனைத் தக்க வைப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் நலனுக்காகவோ நாட்டின் நலனுக்காகவோ பௌத்த பயன்படுத்தப்படவில்லை. பயன்படவில்லை. மதத்தின்பெயரால் இஸ்லாமிய நாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் குருதி சிந்தப்படுகிறது. இராக், சிரியா ஜேமன், எகிப்து, பாகிஸ்தான் போன்றநாடுகளில் முஸ்லிம்கள ஒரே மதத்தின் பெயரால் ஒரே அல்லாவின் பெயரால் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொல்லுகிறார்கள்.

இஸ்லாம் மதம் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அதனைப் பின்பற்றுவோர் உலகில் 1.62 பில்லியன்(ஒரு பில்லியன் 100 கோடி) ஆகும். மக்கள் தொகையில் இது 23 விழுக்காடாகும். உலகில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட நாடுகளின் எண்ணிக்கை 49 ஆகும்.

ஒரு பில்லியன் (62 விழுக்காடு) உலக முஸ்லிம்கள் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் வாழ்கிறார்கள். அரபு நாடுகளில் 20 விழுக்காடு. மத்திய கிழக்கு அரபு அல்லாத துருக்கி மற்றும் இரான் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள். ஆபிரிக்காவில் நைசீரியா மற்றும் எகிப்து மக்கள் தொகையில் பெரிய நாடுகள். மேலும் 300 மில்லியன் முஸ்லிம்கள், முஸ்லிம் பெரும்பான்மை அல்லாத நாடுகளில் வாழ்கிறார்கள். இது உலகளவில் அயந்தில் ஒரு பங்காகும். எடுத்துக்காட்டாக இந்தியாவில் உலகில் மூன்றாவது தொகை முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். சிரியாவை விட சீனாவில் அதிக முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். யோடான் மற்றும் லிபியாவை விட உருசியாவில் அதிகளவு முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்.

முஸ்லிம்களில் ஜுன்னி பிரிவினர் 87–90 விழுக்காடு, ஷியா பிரிவினர் 10–13 விழுக்காடு. இவர்கள் இராக், இரான், பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நான்கு நாடுகளில் அதிகளவில் உள்ளார்கள். லெபனான் நாட்டில் ஷியாக்களே பெரும்பான்மையாக இருக்கிறார்கள்.

இஸ்லாம் மதத்தில் பல பிரிவுகள் இருந்தாலும் ஜுன்னி–ஷியா பிரிவுகளே முக்கியமானது. ஷியா இஸ்லாம் மதத்தின் முக்கியமான உட்பிரிவு. இது இஸ்லாமிய மதப்பிரிவுகளுள் ஜுன்னி இஸ்லாமிற்கு அடுத்தபடியாக அதிகமானோர் பின்பற்றும் பிரிவாகும். ஷியா என்ற சொல் அலியைப் பின்பற்றுவோர் என அரபு மொழியில் பொருள்படும். மொகமது நபி இறந்த போது வாரிசு சண்டை எழுந்தது. ஷியாக்கள் மொகமது நபியின் மருமகனான அலியே அவரின் உண்மையான வாரிசு என்று வாதிட்டார்கள்.

இராக், இரான், சிரியா இந்த மூன்று நாடுகளிலும் ஷியா பிரிவினரே பெரும்பான்மை. எனவே, அந்நாடுகளில்ஷியாக்கள்சிறுபான்மை ஜின்னிகளோடு மோதிக் கொண்டிருக்கிறார்கள். எஞ்சிய ஜின்னி நாடுகளான அரேபியா, குவைத் ஜின்னுக்கு ஆதரவு வழங்கி வருகின்றன.

இந்திய முஸ்லிம்களில் 90 விழுக்காடு ஜுன்னி முஸ்லிம்கள். எஞ்சிய பத்து விழுக்காடு ஷியா முஸ்லிம்கள். ஷியா பிரிவினர் அதிகம் வாழும் முஸ்லிம் நாடு ஈரான். ஜின்னி, ஷியாக்களுக்கு இடையே பல நூற்றாண்டுகள் சண்டையும் சச்சரவும் இருந்து வந்துள்ளன. ஷியாக்களின் ஆட்சி நடைபெறும் நாடுகள் ஈராக் மற்றும் ஈரான். ஈரானுக்கு அடுத்தபடியாக இராக், லெபனான், பாகிஸ்தான் என பல நாடுகளில் ஷியாக்கள் உள்ளனர்.

ஜின்னிகளும்ஷியாக்களும்அல்லாஒருவனே ஏன இறைவன், அவனால் அருளப்பட்டது குர்ஆன், அவனது இறுதித் தூதர் மொஹமது நபி என்ற இஸ்லாத்தின் அடிப்படையை எல்லாப்பிரிவுகளும் ஏற்றுக்கொள்கின்றன.

மொஹமது நபிகளுக் குப் பிறகு இஸ்லாமிய ஆட்சியாளராக (கலிபா) யாரை நியமிப்பது என்பதில் வேறுபாடு ஏற்பட்ட போது மொஹமது நபிகளாரின் நெருங்கிய தோழரும் மாமனாருமான அபூபக்கரை முதல் கலீபாவாக ஜின்னிகள் ஏற்றனர். ஷியா பிரிவினரோ மொஹமது நபிகளின் மற்றொரு தோழரும் மருமகனுமான அலியே வாரிசு என்றனர். இதில் தொடங்கிய சண்டை இன்றுவரை நீடிக்கிறது.

தொழுகைக்கான அழைப்பில் (பாங்கு) சிறிய வேறுபாடு காணப்படுகிறது. அல்லாஹி அக்பர் என்று தொடங்கும் பாங்கின் பொருள் இறைவன் மிகப் பெரியவன்! வணக்கத்துக் குரியவன்! இறைவனைத் தவிர வேறெவரும் இல்லை! மொஹமது இறைவனின் தூதர்! தொழ வாருங்கள். வெற்றி பெற வாருங்கள் என்பது. இதில் ஷியாக்கள் மேலும் ஒரு வரியைச் சேர்த்துக் கொள்கிறார்கள். முஹம்மது நபி அல்லாஹ்வின் இறுதித்தூதர் அவரது வாரிசு அலி என்பதே அவ்வாசகம்.

தொழுகையில் கொஞ்சம் வித்தியாசம். ஐந்து வேளைத் தொழுகையை மூன்று வேளைகளில் தொழுது விடுகின்றனர் ஷியாக்கள். தொழுகையில் ஸஜ்தா எனும் தலை பணியும் நிலையிலய் காகே ஷிபா எனப்படும் புனித கர்பலாவின் மண்ணால் செய்யப்பட்ட சில் ஒன்றை வைக்கிறார்கள். ஜின்னிகள் இவ்வாறு செய்வதில்லை.

ஜகாத் தமது வருவாயில் இரண்டரை விழுக்காட்டை ஜகாத் (ஏழை வரிஅல்லது கொடை) தரவேண்டும் எனபது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் விதிக்கப்பட்ட கடமை ஆகும். பணக்காரர்களின் செல்வத்தில் ஏழைகளுக்கு உரிய பங்கு இது. ஷியா முஸ்லிம்கள் இந்த இரண்டரை விழுக்காடு ஜக்காத்துடன் மொத்த ஆண்டு சேமிப்பில் 20 விழுக்காட்டை கும்ஜ் ஆகத் தரவேண்டும்.

மொஹறம் பண்டிகை ஜின்னி, ஷியா முஸ்லிம்களை வேறுபடுத்திக் காட்டும். ஷியாக்கள் மொஹறத்தைத் துக்க அனுஷ்டிப்பாக முக்கியத்துவம் தந்து கடைப்பிடிப்பார்கள். இராக்கில் மொஹறம் நாளில் மார்பில் கைகளால் அல்லது சவுக்கால் ஓங்கி அடித்தபடி தங்களை வருத்திக் கொண்டு வீதிகளில் ஊர்வலம் செல்வார்கள்.

இஸ்லாம் என்றால் அடிபணிதல் என்று பொருள். அடிபணிதல் என்றால் என்ன? இஸ்லாம் என்பது அல்லாஹ்வை நீங்கள் வணங்குவதும் அவனுக்கு நீங்கள் எதையும் இணை வைக்காமலிருப்பதும் தொழுகையை நிலை நிறுத்துவதும் கடமையான ஸக்காத்தை வழங்கி வருவதும் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும் ஆகும் என்பது மொஹமது நபிகளின் அறிவுரையாகும். ஏக இறைவனின் வார்த்தைகளை ஏற்று அதற்கு அடிபணிந்து நடப்பவனே முஸ்லிம் ஆவான். பிறப்பினால் ஒரு மனிதன் முஸ்லிமாவதில்லை இஸ்லா த்தை கடைப்பிடிப்பதன் மூலம்தான் ஒருவன் முஸ்லிமாகிறான். இஸ்லாத்தின் சாராம்சம் முழுவதையும் ஒரே வரியில் சுருக்கிவிடலாம். அது என்ன? படைத்தவனை வணங்கு படைக்கப்பட்டவற்றை வணங்காதே என்பதே அது.

இரவும் பகலும், சூரியனும் சந்திரனும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவை தாம். ஆகவே, நீங்கள் அல்லாஹவையே வணங்குகிறவர்களாக இருந்தால் சூரியனுக்கும், சந்திரனுக்கும்ஸுஜுது செய்யாதீர்கள்– இவற்றைப் படைத்தவனாகிய அல்லாஹ்வுக்கே ஸுஜுது செய்யுங்கள்– (குர்ஆன் 41–37)

இஸ்லாம் சகோதரத்துவத்தை தீவிரமாக வற்புறுத்தும் மதம். ஆனால், அதற்கு எதிரான போக்கே நிலவுகிறது. அதேபோல் பௌத்தம் அஹிம்சையைப் போதிக்கிறது. எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் பேணல், எல்லா உயிர்களிடத்தும் அன்பு, எவ்வுயிர்க்கு ஆயினும் இரக்கம் என்பது புத்தரின் போதனை ஆகும். கிறிஸ்த்தவ மதம் உன்னைப்போல் உன் அயலானை நேசி எனப் போதிக்கிறது.

இந்துமதம் அன்பே சிவம், அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் என்கிறது. ஒன்றே குலம். ஒருவனே தேவன் என்கிறார்கள் சித்தர்கள்.

இருந்தும் நடைமுறையில் மதங்கள் ஒன்றோடு ஒன்று முட்டிமோதிக் கொள்கின்றன. மதம் என்ற பெயரில் குருதி சிந்தப்படுகிறது. இராக்கில் மட்டும் இந்த ஆண்டில் (2013) வெடிகுண்டு மற்றும் தற்கொலைத் தாக்குதல்களுக்கு 4,137 பேர் பலியாகியுள்ளார்கள். 9,865 பேர் காயப்பட்டுள்ளார்கள்.

இன்னும் ஒன்று. மதங்கள் மதமாற்றம் மூலம் தத்தமது எண்ணிக்கையைப் பெருக்கப்பார்க்கின்றன. தீவிர அடிப்படை முஸ்லிம் வாதிகள் உலகம் முழுவதும் இஸ்லாமிய ஆட்சி நிறுவப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்த மதச் சண்டைகளைப் பார்க்கும் போது உலகில் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள் இருப்பதுபோலத் தோன்றுகிறது. அந்தக் கடவுளர் தமக்குள் அடிபட்டுக் கொள்கிறார்கள் என எண்ணத் தோன்றுகிறது. மதங்களின் பெயரால் மனித குலம் பிரிந்து சண்டையிட்டுக்கொண்டு இருக்கிறது. இதனைக் கண்ட வள்ளலார்,

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே, சாத்திரச் சந்தடியிலே கோத்திரச் சண்டையிலே, ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர், அலைந்து அலைந்து விணே அழிதல் அழகலவே

என வருந்துகிறார்.

தெய்வம் பலபல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பவர் மூடர் என்கிறார் மகாகவி பாரதியார்.

தெய்வம் பல பல சொல்லிப்– பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வதனைத்திலும் ஒன்றாய்– எங்கும்
ஓர்பொருளானது தெய்வம்.
தீயினைக் கும்பிடும் பார்ப்பார்– நித்தம்
திகைை வணங்கும் துருக்கர்;
கோயிற் சிலுவையின் முன்னே– நின்று
கும்பிடும் யேசு மதத்தார்.
யாரும் பணிந்திடும் தெய்வம்– பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்;
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று– இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்!

-நக்கீரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் அனல்மின் ஒப்பந்தம் 5ஆம் திகதி கைச்சாத்தாகும்

(கொழும்பு)

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்டகாலமாக இழுபறியாக இருந்து வரும் சம்பூர் அனல் மின் திட்டத்துக்கான ஒப்பந்தம் அடுத்த மாதம் 5ஆம் திகதி கைச்சாத்திடவுள்ளதாக இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

500 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் நிர்மாணிக்கப்படவுள்ள இத்திட்டத்தில் இந்தியாவின் தேசிய அனல்மின் கூட்டுத்தாபனமும் இலங்கை மின்சார சபையும் சமபங்குகளைக் கொண்டிருக்கும்.

இந்தத் திட்டத்தில் இந்தியாவின் தரப்பில் 200 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்படவுள்ளது.

இந்த செயற்றிட்டத்துக்கான இயந்திரத்தொகுதிகள், ஆலோசனை சேவைகள் மற்றும் கட்டட வடிவமைப்பு என்பன வெளிப்படையான உலக கேள்விப்பத்திரம் மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய இயந்திர தொழில் நுட்பங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பூர் அனல் மின்நிலையத்துக்கான கட்டுமானப்பணிகள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நிறைவடையத்தக்க வகையில் உருவாக்கப்பட்டன.

ஆயினும் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் தொடர்பான விதிகளில் காணப்பட்ட இழுபறி நிலையால் இருதரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடு காணப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் அண்மையில் இணக்கம் தெரிவித்ததையடுத்து இந்த ஒப்பந்தம் அடுத்த மாதம் 5ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## துப்பாக்கிச் சூடு நடத்திய இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

வெலிவேரியவில் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய ஒரு தொகுதி இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பொலிஸார் நடத்திய விசாரணைகளின் மூலம் துப்பாக்கிச் சூடு நடத்திய இராணுவத்தின் ஒரு பகுதியினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்ட இராணுவ அதிகாரியும் அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான ஆரம்ப விசாரணை அறிக்கையை பொலிஸார் அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளதுடன் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை போராட்டம் நடத்தப்பட்ட போது யார் இராணுவத்திற்கு அழைப்பு விடுத்தார்கள் என்பது தமக்கு தெரியாது என கம்பஹா உயர் பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்த சம்பவம் தொடர்பில் இராணுவத்தினர் தனியான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் 18ஆம் திகதி இந்தியா பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் இந்தியாவைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதற்கே அவர் இந்தியா செல்கிறார். இந்த விஜயத்தின்போது இருதரப்பு உறவு குறித்தும் இந்திய அரச தலைவர்களுடன் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக்கூடாது என இந்தியாவிலுள்ள சில அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## குற்றச்செயல்களில் ஈடுபட்ட 5626 இராணுவத்தினருக்கு தண்டனை விதிக்கப்பட்டது

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக 5 ஆயிரத்து 626 பேருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதில் 421 அதிகாரிகளும் 5 ஆயிரத்து 205 உத்தியோகத்தர்களும் உள்ளடங்குவர்.

கடந்த ஏழு ஆண்டு காலப்பகுதியுள்ளேயே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்பட்டவர்களில் பத்து பேர் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டதுடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்களும் மீளப்பெறப்பட்டன.

ஐந்து சிரேஷ்ட படையதிகாரிகளுக்கு தண்டனை அடிப்படையில் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

## இந்தியா எம்மிடமிருந்து ஆயுதங்கள் வாங்கவில்லை

### இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிடம் இருந்து இந்தியா ஆயுதங்களை வாங்கியதாக வெளியான செய்திகளை இலங்கையின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய நிராகரித்துள்ளார்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில்,

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியாவின் முப்படைகளுக்காக ரஷ்யா, இஸ்ரேல், பிரித்தானியா, அமெரிக்கா, சுலோவாக்கியா, போலந்து, பின்லாந்து , இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து 23.5 பில்லியன் ரூபா பெறுமதியான ஆயுதங்களை கொள்வனவு செய்ததாக குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவின் பிரிஜ செய்தி நிறுவனம் மற்றும் ஊடகங்கள் பலவும் இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தன. இச்செய்தியை மறுப்பதாக இலங்கை இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களில் ஒருபோதும் இந்தியாவுக்கு ஆயுதங்களை இலங்கை விற்பனை செய்யவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)




* 1040 - ஸ்கொட்லாந்தின் மன்னன் முதலாம் டங்கன் மக்பெத்துடனான போரில் கொல்லப்பட்டான்.
* 1057 - ஸ்கொட்லாந்தின் மன்னன் மக்பெத் மூன்றாம் மால்க்கமுடனான போரில் கொல்லப்பட்டான்.
* 1915 - பனாமா கால்வாய் திறக்கப்பட்டது.
* 1920 -வார்சாவில் இடம்பெற்ற போரில் சோவியத் படைகளை போலந்து இராணுவத்தினர் வென்றனர்.
* 1945 - இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் சரணடைந்தது.
* 1945 - இரண்டாம் உலகப் போரில் கொரியா விடுதலை பெற்றது.
* 1947 - பாகிஸ்தானின் முதலாவது ஆளுநராக முகமது அலி ஜின்னா பதவியேற்றார்.
* 1947 - இந்தியா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்று பொதுநலவாய அமைப்பின் கீழ் தனி நாடாகியது. ஜவகர்லால் நேரு முதலாவது தலைமை அமைச்சர் ஆனார்.
* 1948 - தென் கொரியா உருவாக்கப்பட்டது.
* 1950 -அஸ்ஸாமில் நிலநடுக்கம் மற்றும் வெள்ளம் காரணமாக 574 பேர் உயிரிழந்தனர். மேலும் 50 இலட்சம் பேர் வீடிழந்தனர்.
* 1960 - கொங்கோ குடியரசு பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
* 1973 - வியட்நாம் போரில் ஐக்கிய அமெரிக்கா கம்போடியா மீதான குண்டுவீச்சை நிறுத்தியது.
* 1975 - வங்காள தேசத்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி ஷேக் முஜிபுர் ரகுமான் மற்றும் அவரது குடும்பத்தினர் (ஷேக் ஹசீனா தவிர) அனைவரும் கொல்லப்பட்டனர்.
* 1984 - துருக்கியில் குர்து மக்கள், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி, இராணுவத்திற்கெதிராக கெரில்லா போரை ஆரம்பித்தனர்.
* 2005 - இந்தோனேசிய அரசாங்கத்துக்கும் ஆச்சே விடுதலை இயக்கத்திற்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஹெல்சிங்கியில் கைச்சாத்தானது.
* 2007 -பெருவில் இடம்பெற்ற 8.0 அளவு நிலநடுக்கத்தில் 514 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புக்கள்**

* 1769 - நெப்போலியன் பொனபார்ட், பிரெஞ்சு மன்னன் (இ. 1821)
* 1872 - அரவிந்தர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர், ஆன்மீகவாதி (இ.1950)
* 1964 -அர்ஜுன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
* 1961 - சுஹாசினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை


**இறப்புகள்**

* 1975 - ஷேக் முஜிபுர் ரகுமான், வங்காள தேச ஜனாதிபதி (பி. 1920)

**சிறப்பு நாட்கள்**

* இந்தியா - சுதந்திர தினம் (1947)
* தென் கொரியா - சுதந்திர தினம் (1948)
* கொங்கோ - சுதந்திர தினம் (1960)

**பனாமா கால்வாய்**



பனாமா கால்வாய் பசுபிக் பெருங்கடலையும் அத்திலாந்திக் பெருங்கடலையும் அமெரிக்கக் கண்டங்களிடையே இணைக்கும் செயற்கைக் கால்வாய் ஆகும். இது அமைக்கப்படும் முன்னர் கப்பல்கள் தென்னமெரிக்கக் கண்டத்தைச் சுற்றியே செல்ல வேண்டியிருந்தது. பதினாறாம் நூற்றாண்டிலேயே இத்தகைய கால்வாய்க்கான எண்ணம் இருந்தது. இதன்படி 1880 இல் பிரான்ஸ் தலைமையில் கால்வாய் வெட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இதன்போது 22 ஆயிரம் வரையான தொழிலாளர்கள் இறந்ததோடு இம்முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது.

பின்னர் 1900ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்கா மீண்டும் இப்பணியைத் மீளஆரம்பித்து 1914 இல்

500 தொழிலாளர் இறந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இக்கால்வாய் 78 கிமீ நீளமானதாகும். பனாமா கால்வாயில் மூன்று பெரிய நீர் கதவுகள் வைத்து செயற்கையாக நீர் தேக்கி வைக்கப்படுகிறது.

கால்வாய் அளவுகள், நீளம்: 59 மைல்கள், ஆழம்: 41 - 45 அடிகள், அகலம் 500 - 1000 அடிகள்(கால்வாயின் மிக குறுகிய அடிப்பகுதி அகலம் 300 அடிகள்) இந்த கால்வாயில் மூன்று பெரிய பிரிவுகள் இருக்கிறது. ஆயினும் எல்லா இடங்களிலும் ஒரே அகலம் , ஆழம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டுசைவத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும்.

இதன்படி இன்று வியாழக்கிழமை சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் வழங்கும் **என் கடன் பணி செய்து கிடப்பதே** என்ற விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.45 முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. மஹோற்சவத்தின் நான்காம் நாளான இன்றைய இசையரங்கில் உ.இராதாகிருஷ்ணனின் மாணவிகள் வழங்கும் வயலின் இசை இடம்பெறவுள்ளது.

இதன் போது இ.பிரசாந்தி, கு.சிவானுஜா, த.எழிலினி, ஜெ. அர்ச்சனா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அணி செய் கலைஞராக மிருதங்க கலைஞர் என். சதீஸ்குமார் பங்கு கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து எஸ்.சுபாகரன் வழங்கும் பாடல் இசைக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

இவ் இசைக்கச்சேரியில் அணி செய்கலைஞர்களாக வயலின் அ. ஜெராமன், மிருதங்கம்- இரா.சிவராமன், முகர்சிங்- கே.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்நிகழ்வில் இன்றைய நிகழ்வுகளாக ஆசிரியர் நி.பகீரதன் வழங்கும் **நடமாடும் கோவில்** எனும் விடயப் பொருளிலான சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்துயாழ்ப்பாணம்வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி அறநெறிப் பாடசாலை, பண்டத்தரிப்பு மார்க்கண்டு அறநெறிப் பாடசாலை, யாழ். நாச்சிமார் கோவிலடி காமாட்சி அம்பாள் அறநெறிப்பாடசாலை ஆகிய வற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-5)

## சீன தூதுவரை சந்தித்தார் இராணுவ தளபதி தயா

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரட்நாயக்க இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியான் வேரவை சந்தித்துள்ளார்.

வூ ஜியான்வோ மற்றும் நான்கு பேர் அடங்கிய சீனப் பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் இராணுவத் தலைமையகத்திற்கு விஜயம் செய்து இலங்கை இராணுவத் தளபதியை சந்தித்துள்ளனர். இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் இராணுவ விவகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. (அ-2)

# சாரதி மீது மிளகாய்த்தூள் வீசிவிட்டு கார் கடத்தல்

(கொழும்பு)

வாடகைக்கு காரொன்றை அமர்த்தி இடை வழியில் சாரதி மீது மிளகாய் தூளை வீசிவிட்டு 40 இலட்சம் ரூபா பெறுமதியான அக் காரைக் கொள்ளையடித்த நபரொருவர் ஹொரணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒருகொடவத்தை பகுதியிலுள்ள வாகனங்களை வாடகைக்குவழங்கும் நிலையமொன்றுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ள குறித்த சந்தேகநபர் காரொன்றை வாடகைக்கு அமர்த்தியுள்ளார். இடைநடுவில் வைத்து குறித்த கார் கொள்ளையிடப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றது.

இது குறித்து இரவு நேரத்தில் ரோந்தில் ஈடுபடும் பொலிஸாருக்கும் பொலிஸ் சோதனைச்சாவடிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

உடனடியாக நேற்றுமுன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் சந்தேகநபர் காருடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். (அ-2)

# வடக்கு, கிழக்கில் 650 குளங்களை புனரமைக்க ரூ.3000 மில். ஒதுக்கீடு

(கொழும்பு)

யுத்தத்தினால் சேதமடைந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள 650 குளங்களைத் துரிதமாக புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் சுனில் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் குளங்களைப் புனரமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள சேதமடைந்த குளங்கள் புனரமைக்கப்படும். இதனூடாக மக்களுக்கு விவசாயம், ஏனைய தேவைகளுக்குமான நீர் தடையின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் குளங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்யவும் திட்டமிடப்பட் டுள்ளது. (அ-2)

# ஆஸிக்கு ஆட்களை அனுப்பும் 16 பேர் மாத்தறையில் கைது

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக ஆட்களை அனுப்புகின்றவர்களில் 16 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யதுள்ளதாக மாத்தறை பிரிவு குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பிரதான முகவரான திருகோணமலையைச் சேர்ந்த வர்த்தகர் உட்பட கடற்படையை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் கடற்படையின் சமிக்ஞை பிரிவு ஆலோசகர், சமிக்ஞை பிரிவில் கடமையாற்றுவோர் இருவர், மேலும் சில ஊழியர்களும் அடங்குவதாக அந்த பிரிவினர் அறிவித்துள்ளனர்.


இவர்கள் வடக்கு, கிழக்கை சேர்ந்தவர்களையே சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பி வைத்து வருபவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கந்தளாய், களுவாஞ்சிக்குடி, கல்குடா ஆகிய இடங்களில் வைத்தே இவர்களை கைது செய்துள்ளதாக அப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மாத்தறையில் இருந்து சென்ற விசேட குழுவினரே கடந்த 11 நாட்களாக மாறு வேடத்தில் இருந்து இவர்களை கைது செய்ததாக அந்த பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இந்த குழுவினர் புலிச்சந்தேகநபர்களையும் கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக செல்வோரிடமிருந்து பெருந்தொகையான பணத்தை அறவிட்டுக் கொண்டுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது. (அ-2)

# நல்லூரான் திருவடிக்கு நான்காம் திருவிழா



## நல்லூரான் புகழ்பாடு...

சீர் பெருகு நல்லூரான் திருப்புகழை பாடு
செந்தமிழர் குல தெய்வம் அவன் அருளை நாடு
ஆர் அறிவார் வருங்காலம் அவன் அறிவான் பாரு
அந்தமில்லா புகழாளன் அவன் அடியை சேரு
பார் அறியும் பட்ட துயர் செத்து உயிர் பிழைத்தோம்
பதுங்கு குழி கிடந்து விழிபிதுங்க இளைத்தோம்
வேர் அறுந்து போகாமல் குல விருட்சம் காப்பாய்
வியன் கொடியை ஏற்றுகிறோம் குகன் அடியே காப்பு

கா.கார்த்திகேசு
நல்லூர்

## நல்லூரின் சிறப்பே நீ முருகா



தில்லை நடராஜன் குமரனல்லவா
தொல்வினைகள் போக்கிடும் முருகா நீ
கொல்ல வந்த சூரனிற்கே உன்
எல்லையில்லா கருணையாலே
வெல்லும் போதும் வாழ்வளித்தாய் அவன்
தோல்வியிலே நல்வினையை
பொல்லாத அசுரனுக்கும் புரிய வைத்தாய்
நல்லோர்க்கும் தேவருக்கும்
எல்லோர்க்கும் அருள் புரியும்
நல்லை கந்தா சில்என்ற காற்றைவிட
புல்லரிக்கும் பக்திதரும் இனிமையானவன்
வில்லம்பு வேடருக்கும் மைத்துனரானாய்
கல்லுக்குள்ளும் அமர்ந்திருக்கும் தெய்வீகமே
வல்வினைகள் போக்கி வல்லமை தந்து
நல்லைக் கந்தனே உன்நாவிலே உருவான
நல்ல தமிழிற்கு சுதந்திரமும் சுபீட்சமும் தரவேண்டும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## உனை மறவாதிருக்கும் வரம் வேண்டும்



நல்லையில் நல்லாட்சி புரிபவனே
நம்பினோர் குறை
தீர்ப்பவனே
நம் பாவங்களைப் போக்குபவனே
துன்பங்களைத்
தூரவோட்டுபவனே
தேவர்களைக் காத்தவனே
சரவணப் பொய்கையில்
அவதரித்தவனே
திக்கற்றவர்களுக்குத் துணையாய்
இருப்பவனே
அப்பனுக்குப் பாடம் சொன்னவனே
அழகின் வடிவாய்
திகழ்பவனே
அழகிய மயிலை வாகனமாய்
கொண்டவனே
குறத்தி மணவாளனே
கந்தனே எங்கள் முருகனே உனை
நாம் எப்பிறப்பிலும்
மறவாதிருக்கும் வரமொன்று
வேண்டுமய்யா

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

## நல்லூர் கந்தன் அநுபூதி

சங்கத் தமிழ்சங் கமமே முருகா
பொங்கும் புலவர் புகழ்சேர் குருவே
இங்கெம் துயரை இனிதோட் டிடவுன்
அங்கை வேல்கொண் டாள்நல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவின் நீர்மூழ்கிக் கப்பல் வெடித்துச் சிதறியது;

(மும்பை)

மும்பை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலில் நேற்று முன்தினம் நள்ளிரவில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் கப்பலின் பெரும்பகுதி எரிந்து நாசமானது. அதில் இருந்த கடற்படை வீரர்கள் பலர் கடலில் குதித்து தப்பினர். 3 அதிகாரிகள் உட்பட 18 வீரர்களுக்கு என்ன நடந்தது என தெரியவில்லை.

## 18 வீரர்கள் பலி!

இந்திய கடற்படைக்கு சொந்தமான கப்பல்களை நிறுத்தி வைக்க மும்பை துறைமுகத்தில் தனி இடம் உள்ளது. ரோந்து பணிகளில் ஈடுபடாத நேரத்தில் போர்க் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பல்கள் இங்கு நிறுத்தி வைக்கப்படும்.

கடற்படையின் சிந்து ரக்ஷா என்ற நீர்மூழ்கி கப்பல், பாதி வெளியில் தெரியும்படி நேற்று முன்தினம் இங்கு நிறுத்தப்பட்டிருந்தது. நள்ளிரவு சுமார் ஒரு மணியளவில் இந்த நீர்மூழ்கி கப்பலில் இருந்து பயங்கர வெடி சத்தம் கேட்டது. தெற்கு மும்பை முழுவதும் இந்த சத்தம் கேட்டது. அடுத்த சில நொடிகளில் கப்பல் முழுவதும் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. தொலை தூரங்களில் இருந்தவர்களுக்கும் தெரியும் வகையில் பெரிய அளவில் தீ சுவாலையுடன் கூடிய ஒளிபிழம்பு இப்பகுதியில் காணப்பட்டது.

இந்தியா கேட் பகுதியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்த தீயணைப்பு துறை துணை தலைவர் ரஹன்டேலுக்கும் வெடி சத்தம் கேட்டது. கடற்படை கப்பல்கள் நிறுத்தும் இடத்தில் இருந்து பயங்கர தீயும் புகையும் வருவதை கண்ட அவர், உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்துள்ளார். மும்பை துறைமுக தீயணைப்பு நிலையத்தை சேர்ந்த 16 தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து நீர்மூழ்கி கப்பலில் பரவிய தீயை அணைக்க போராடினர்.

வெடிவிபத்து ஏற்பட்டவுடன் நீர்மூழ்கி கப்பலில் இருந்த பல வீரர்கள் கடலில் குதித்து உயிர் தப்பினர். சிலருக்கு தீக்காயம் ஏற்பட்டது. நீர்மூழ்கி கப்பலில் 3 அதிகாரிகள் உட்பட மேலும் 18 வீரர்கள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.


அவர்களை மீட்க தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. வீரர்களை மீட்கும்வரை ஓயமாட்டோம் என கடற்படை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தீ விபத்து குறித்து விசாரணை நடத்த கடற்படை உத்தரவிட்டுள்ளது. விபத்துக்குள்ளான கப்பலில் பலவிதமான போர்க் கருவிகள் இருந்தன. அவையும் தீயில் கருகி நாசமாகின.

இதனையடுத்து பிரதமர் மன்மோகன்சிங்கிடம் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி விபத்து தொடர்பாக நேரில் விளக்கம் அளித்துள்ளார்.

மேலும் விபத்து குறித்து அறிக்கை ஒன்றையும் இவர் தாக்கல் செய்வார் எனக் கூறப்படுகிறது. (அ-2)

# இந்தியாவின் சுதந்திரதினம்; கோலாகல கொண்டாட்டம்



(சென்னை)

இந்தியாவின் 67 ஆவது சுதந்திரதினம் இன்று கொண்டாடப்படுகிறது. சென்னை கோட்டையில் முதலவர் ஜெயலலிதா ஜெயராம் தேசிய கொடியை காலை 9 மணிக்கு ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.

இன்று காலை கோட்டைக்கு வரும் முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் வரவேற்பார்.

அவர் உள்துறைச் செயலாளர் நிரஞ்சன் மார்டி, டிஜிபி ராமானுஜம் மற்றும் முப்படைகளின் தென் பிராந்திய தளபதிகளை முதல்வருக்கு அறிமுகம் செய்து வைத்த பின்னர் முதல்வர் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வார்.

இதைத் தொடர்ந்து சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது போர் நினைவுச் சின்னத்தில் தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெறும். அயல்நாடு உட்பட பல்வேறு நாடுகளுடன் நடைபெற்ற போர்களில் பங்கேற்று உயிர் நீத்த தியாகிகளுக்கு முதல்வர் ஜெயலலிதா மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துவார்.

பின்னர் ஊனமுற்ற சிறுவர்களுக்கு இனிப்பு பண்டங்களையும், சிறந்த தொண்டு ஆற்றியவர்களுக்கு விருதுகளையும் முதல்வர் வழங்குவார். சுதந்திர தின நிகழ்ச்சியை முன்னிட்டு கோட்டை பகுதி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் கோட்டை பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஹோட்டல்கள், லொட்ஜ்களில் சோதனைகள் மேற்கொள்



சென்னையில் உச்சக்கட்ட பாதுகாப்பு...

யிரத நிலையங்கள், பேருந்து நிலையங்கள், வர்த்தக நிறுவனங்கள், சினிமா திரையரங்கு ஆகியவற்றில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு கோவை, திருச்சி, சேலம், நெல்லை, மதுரை, இராமேஸ்வரம் உள்ளிட்ட முக்கிய நகரங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் மாநில எல்லைகளில் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் சுமார் 3 இலட்சம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அமெரிக்காவில் வசித்து வரும் இந்தியர்கள் இந்திய சுதந்திரதின விழா கொண்டாட்டத்தை எதிர்வரும் 18 ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

இக் கொண்டாட்ட அணி வகுப்பு ஊர்வலங்க்ளையும், வண்ணமயமான மிதவை வண்டிகளும், இந்திய உணவு வகைகளுடன் கூடிய விருந்துகளை உள்ளடக்கியதாக இந்திய நாட்டின் பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் வண்ணம் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு சமூக சேவகர் அன்னா ஹசாரே தலைமையில் நடைபெற உள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இந்திய சங்கங்களின் கூட்டமைப்பு ஆண்டு தோறும் இந்திய சுதந்திர தினப் பேரணியை நடத்தி வருகிறது. இந்த ஆண்டு எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள இப்பேரணிக்கு தலைமை தாங்குமாறு சமூக சேவகர் ஹசாரேவுக்கு இந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. இதை ஏற்றுக் கொண்டுள்ள ஹசாரே நாளை அமெரிக்கா செல்கிறார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்துக்குச் செல்லும் அவர் கப்பிடல் ஹில் பகுதியில் அமெரிக்க எம்.பி.க்களைச் சந்திக்க உள்ளார். இதுதவிர, அவர் சான்பிரான்சிஸ்கோ, மேரிலாண்ட், வார்டனில் பென்சில் வேனியா பல்கலைக்கழகம், கொலம்பியா பல்கலைக் கழகம் ஆகிய இடங்களில் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களுடன் கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளார். (அ-2)

# பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியாவை அழைக்கிறார் நவாஷ்

இந்தியாவுடனான உறவுகளில் புதிய தொடக்கத்தை ஏற்படுத்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக இஸ்லாமாபாத்தில் தொலைக் காட்சி மூலம் அவர் ஆற்றிய உரையில்,

இந்திய-பாகிஸ்தான் உறவுகளில் புதிய தொடக்கத்தை ஏற்படுத்துவோம். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நட்பு ரீதியிலான முறையிலும், அமைதியான சூழ்நிலையிலும் தீர்வு காண்பதற்கு அமர்ந்து பேசுவோம். இருநாடுகளும் நல்ல நண்பர்களாக வேண்டும். திறந்த மனதோடு இரு தரப்பும் விவாதிக்க வேண்டும்.

இந்தியர்கள் மீது நாங்கள் மிகுந்த அன்பு வைத்துள்ளோம். நாம் நல்ல தோழர்களாகத் திகழ வேண்டும். 1947ஆம் ஆண்டுக்கு முன்பு இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த மக்கள் ஒன்றாகவே வசித்து வந்தனர். இப்போது சுந்திரம் பெற்று பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், இரு நாடுகளும் தங்களின் நலன் மற்றும் செழுமைக்காக உறவுகளை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றார்.

இதேவேளை, பாகிஸ்தானிடமிருந்து அமைதிப் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு வந்திருந்தாலும், வன்முறையும் பயங்கரவாதமும் இல்லாத சூழலில் மட்டுமே பேச்சுவார்த்தையைத் தொடரமுடியும் என்று இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். எல்லையில் 5 வீரர்கள் பாகிஸ்தான் இராணுவத்தால் கொல்லப்பட்ட சம்பவம், இந்தியா பாகிஸ்தானிடையே அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தையை பாதித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, இந்தியாவுடன் அமைதி, நல்லுறவு, ஒத்துழைப்பை மேம்படுத்த விரும்புவதாக கூறிய பாகிஸ்தானின் புதிய பிரதமர், அதன்படி நடந்து கொள்ள வேண்டும். பாகிஸ்தான் மண்ணை இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைளுக்கு பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

2008ஆம் ஆண்டில் மும்பைத் தாக்குதல் சம்பவத்தின் மூளையாகச் செயற்பட்ட ஹஃபிஸ் சயீதை, பாகிஸ்தான் சட்டத்தின் முன் நிறுத்தும் வரை நாங்கள் ஓயமாட்டோம்.

பாகிஸ்தானிடமிருந்து அமைதிப் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு வந்துள்ளது. இருந்தபோதும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வன்முறையும், பயங்கரவாதமும் இல்லாத சூழலே அமைய வேண்டும். கடந்த வாரம் நடைபெற்ற வீரர்கள் படுகொலை, அந்த சூழலுக்கு எதிராக அமைந்துள்ளது.

பாகிஸ்தானின் அழைப்பில் பேச்சுவார்த் தைக்கான கால நிர்ணயம் எதுவுமில்லை. எனவே உரிய நேரத்தில் நாங்களே அவர்களைத் தொடர்பு கொள்வோம் என்றார்.

இதேவேளை, பாகிஸ்தானுடன் நட்புறவை வளர்க்கவும், ஒத்துழைப்பு சார்ந்த உறவை மேம்படுத்தவும் இந்தியா விரும்புகிறது. அது இந்தப் பிராந்தியத்தில் அமைதிக்கு வழி வகுக்கும் என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார். எல்லையில் இந்திய வீரர்கள் 5 பேர் அண்மையில் பாகிஸ்தான் படையினரால் கொல்லப்பட்ட சம்பவத்தின் சூடு இன்னும் தணியாத நிலையில், அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது முக்கியத்துவம் பெறுகிறது. பாகிஸ்தானில் நேற்றைய தினம் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, அந்நாட்டு ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கு பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானுக்கு இருநாள் பயணமாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீன் மூன் நேற்றைய தினம் வந்துள்ளார். பாகிஸ்தான் புறப்படும் முன் நியூயோர்க்கில் வைத்து அவர் கூறுகையில், இந்தியாவும் பாகிஸ்தானும் விரும்பினால் பேச்சுவார்த்தைக்கு உதவ ஐ.நா. தயாராக உள்ளது என்று பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் இந்திய வீரர்கள் கொல்லப்பட்டது மிகவும் வருத்தமளிக்கிறது. எனினும் இரு நாடுகளும் மேற்கொள்ளும் சமரச முயற்சிகள் பாராட்டுக்கு உரியவை. இரு நாடுகளும் சம்மதித்தால், இந்த விவகாரத்தில் ஐ.நா. சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிரதமரை நியமிப்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது

(கொழும்பு)

புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருவதாக கூறப்படுகின்றது.

அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நிமால் சிறிபால டி சில்வா, பசில் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்கள் முன் மொழியப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

புதிய பிரதமர் தொடர்பாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து அரசாங்கம் ஆலோசித்து வரும் நிலையில் இன்னமும் முடிவுகள் எடுக்கப்படவில்லை.

தற்போதைய பிரதமர் டி.எம்.ஜயரட்ன அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக இந்த ஆண்டு தை மாதம் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆயினும் புதிதாக ஒருவர் தெரிவாகும் வரை அவரைத் தொட ர்ந்தும் பிரதமராக பதவி வகிக்குமாறு ஜனாதிபதி கேட்டிருந்தார் என் பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய பிரதமர் தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் மூத்த அமைச்சர்களுடன் ஜனாதிபதி கலந்து ரையாடுகின்றார் என அமைச்சரவை தகவல்கள் கூறுகின்றன.

(அ)

# புகைத்தல் 7 % வீழ்ச்சி கண்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையர்கள் மத்தியில் புகைத்தல் 7வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

மூதாதையர்கள் புகையிலையைப் பயன்படுத்திய போதிலும் தற்போதைய சந்ததியினர் புகையிலையைப் பயன் படுத்தாமையே அதற்கு முக்கியகாரணமெனஅமைச்சு குறிப்பிடுகின்றது.

புகைத்தலுக்கு எதிரான செயற்றிட்டங்கள் ஊடாக மக்களை தெளிவுபடுத்தியமையும் இதற்கான காரணமென தெரிவிக்கப்படுகின்றது.

புகையிலை பாவனையினால் வருடாந்தம் குறிப்பிட்ட அளவினர் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)


யா/இணுவில் இந்து சமூகத்தின்

## சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி ஆசிரியையாக 21 ½ வருடங்கள் பணியாற்றிய செல்வி.சபாரட்ணம் தாமரைக்குமாரியின் சேவையைப் பாராட்டுவதுடன் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### ஆசிரியையின் சேவை விபரம்

அநு/விவேகானந்த தமிழ் வித்தியாலயம்: 01.02.1982 - 04.02.1986

யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 05.02.1986 - 31.12.1987

கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம் 02.05.1988 - 31.12.1992

யா/இணுவில் இந்துக் கல்லூரி 29.01.1993 - 14.08.2013

ஆசிரியரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல பரராஜசேகரப் பிள்ளையாரினதும் இணுவில் கந்தனதும் அருளை வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

(3594)


# வெலிவேரிய சம்பவம் மூலம் மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற சம்பவங்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் முகமாகவே வெலிவேரிய மக்கள் மீது நடத்தப் பட்ட தாக்குதல் சம்பவம் நோக்கப்படுவதாக மாதுலுவாவே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.

வெலிவேரியவில் குடிநீர் இரசாயன கலவை கலந்திருப்பது குறித்து மக்கள் நீண்டகாலமாக பிரச்சினை எழுப்பி வந்தனர். எனினும் அவர்கள் மீது இராணுவத்தை கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் இராணுவத்துக்கு பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த யார் உத்தரவிட்டது? என்பது குறித்து அரசாங்கம் தகவல்களை வெளியிடவில்லை.

அதேநேரம் அவ்வாறு உத்தரவிடவில்லை என்றால் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்திய படையினர் ஏன் கைது செய்யப்படவில்லை என்று சோபித தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே எதிர்காலத்தில் நிகழப்போகின்ற அநியாயங்களுக்கு வெலிவேரிய சம்பவம் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது என்று தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படும் வரை நியாயமான தேர்தல் ஒன்றை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது தெரிவித்தார்.

(அ-2)

# சித்தர் பீடத்தில் ஆடிப்பூர விழா

(யாழ்ப்பாணம்)

சுயம்பு மேல்மருவத்தூர் அதிபரா சக்தி சித்தர் பீட ஆடிப்பூர விழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலய முன்றிலில் ஆரம்ப மாகி பின் அன்னை பராசக்தியின் திருவுருவப் படங்கள் தாங்கி ஊர்வலமாக சென்று சட்டநாதர் சிவன் கோயில் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் அன்னை பராசக்தியின் திருவுருவச் சிலைக்கு பால் அபிஷேக நிகழ்வும் இடம் பெறும். .

(அ-5)


## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

**1. கணனி ஆசிரியர்கள் தேவை**

**தகைமைகள்**

Bscபட்டதாரிகள் அல்லது ICT உயர் தர டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள். விண்ணப்பிக்கலாம்.

25வயதிலிருந்து 30 வயதுக்கு இடையிலிருக்க வேண்டும்.

**2. நடன,சங்கீதபட்டதாரிகள் தேவை (பெண்)**

**தகைமைகள்**

நடனத்தை பிரதான பாடமாக பயின்ற பட்டதாரிகள்
சங்கீதத்தை பிரதான பாடமாகப் பயின்ற பட்டதாரிகள்

3. உணவு, தங்குமிடம் என்பன ஒழுங்குசெய்து தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பமுடிவுத் திகதி : 21.08.2013**

தொடர்புகளுக்கு:
தி.இராசநாயகம்
தலைவர்,
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி
தொலைபேசிஇலக்கம்: 077-0604950,021-4923118



## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் கீழ் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாக கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 15.08.2013 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்(தொலைபேசி இல.0212222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை நிர்வாக கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 15.08.2013முதல்28.08.2013 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு28.08.2013 திகதியன்று பி.ப2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாக கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 29.08.2013 திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை (ரூ) | மீளளிக்கப் படாத தொகை(ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/GA/DDMCU/ FMP-2013-02(I) | மேற்பரப்பு வடிகாலை மேம்படுத்தலும் அமைத்தலும் - இராஜகிராமம் | 14.800 | 06 | C5 | 148,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-03(II) | வடிகால் அமைத்தல்- சக்கோட்டை | 04.532 | 06 | C7 | 45,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-04(III) | வடிகால்கள் மற்றும் மதகுகள் அமைத்தல்- சின்னமடு | 05.027 | 06 | C6 | 50,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-08(IV) | தடுப்புச்சுவர் அமைத்தல்- கீரிமலை | 04.352 | 03 | C7 | 44,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-05(V) | வடிகால் அமைத்தல் - வடலியடைப்பு | 02.677 | 03 | C7 | 27,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-06(VI) | வெள்ளவாய்க்கால்- அரியாலை கிழக்கு | 02.637 | 03 | C7 | 26,000.00 | 1000.00 |

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்.

(2398)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நீதியை விரும்புகிறார்கள்...
ஆனால் அடுத்தவர் விடயத்தில் மட்டும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிரித் ஓத வேண்டியவர் பிரித்து ஓதுகிறார்

இலங்கை பல்லின நாடல்ல. இது பௌத்த சிங்கள நாடு என, பொது பல சேனாவின் தலைவர் வணக்கத்துக்குரிய விமலஜோதி தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு எனக் கூறுவதன் மூலம் தனது மதவாத இனவாத கருத்தை சிங்கள மக்களிடம் விதைக்க அவர் முற்பட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் பௌத்த சிங்கள நாடு எனக் கூறுவதன் ஊடாக இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான வன்முறைகளும் அட்டூழியங்களும் தொடர்வதை பொது பலசேனா ஆதரிப்பது இங்கு உறுதியாகின்றது.

இலங்கையில் இனவாதம் என்ற பேச்சுக்கு இடமில்லை என்று இந்த நாட்டின் ஆட்சி பீடத்தின் உயர்தரப்பினர் கூறிவருகின்ற போதிலும், பொது பல சேனாவின் தலைவர் விமலஜோதி தேரர் மீண்டும் மீண்டும் இலங்கையை பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்தி வருவது அதிர்ச்சியளிக்கக் கூடியது.

அதே சமயம் அவருக்கெதிராக எந்த விதமான சட்ட நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆக, இலங்கையின் சிறுபான்மையினர் தங்களின் இனம் பற்றி கதைப்பதை இனவாதமாகக் கருதப்படுகின்றது.

மாறாக பெரும்பான்மையினம் சார்ந்து எதைக் கதைத்தாலும் அது சிங்களத்தையும் பௌத்தத்தையும் காப்பாற்றுவதற்கான வேதமாகக் கருதப்படுகின்றது.

இத்தகைய நிலைமை இந்த நாட்டில், இனவாதம் ஓயப்போவதில்லை என்பதற்கு தக்க சான்றாகும்.

நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஆளும் வர்க்கத்துக்கு அக்கறைப்பாடு இருக்குமாயின் முதலில் பெரும்பான்மை இனம் சார்ந்தவர்கள் இனவாதம் பேசுவதைத் தடுப்பதே முதற்பணியாகும்.

ஆனால் எங்கள் நாட்டின் சிறுபான்மையினர் கதைப்பதை இனவாதமாகக் கருதப் பட்டு அவர்களை கண்காணிப்பது, அவர்கள் வாழும் இடங்களில் படை முகாம்களை அமைப்பது, எக்காலத்திலும் சிறுபான்மையின மக்களை நம்பக் கூடாது என்பது போலக் கருதி அவர்களுக்கு ஒவ்வாத சட்ட திட்டங்களை உருவாக்குவது, அவர்களுக்கு உரிமை தரக் கூடிய சட்டங்களை நீக்குவது என எத்தனையே நிட்டூரங்கள் நடந்த வண்ணமுள்ளன.

இத்தகைய போக்குகள் புத்திசாலித்தனம் என்ற அடிப்படையில் செய்யப்பட்டாலும் எதிர்பாராத ஆபத்துக்களையும் இத்தகைய திட்டங்கள் கொடுத்து விடலாம் என்ற உண்மை இங்கு உணரப்படுவதாக இல்லை.

இத்தகையதொரு குறுகிய சிந்தனையிலேயே பொது பல சேனா போன்ற அமைப்புக்களின் இனவாத, மதவாத கருத்துக்கள் தென்னிலங்கையில் அதிவேகமாக விதைக்கப்படுகின்றன.

இந்த நாட்டில் பௌத்த துறவியாக இருக்கக் கூடிய ஒருவர் இலங்கை பல்லின மக்களின் நாடல்ல. இது சிங்கள பௌத்த நாடு எனக் கூறுவது எதற்கானது? இத்தகைய கருத்தை இப்போது அவர் முன்வைக்க வேண்டியதற்கான தேவை என்ன? என்பது தீவிரமாக ஆராயப்பட வேண்டிய தாகும்.

உலகுக்கு தர்மத்தைப் போதிக்கும் பொருட்டு பிரித் ஓத வேண்டிய பௌத்த துறவியொருவர் பொது பல சேனாவின் தலைவராக இருந்து கொண்டு இனத்தை, மதத்தை பிரித்து ஓது கிறார்.

ஒரு பௌத்த துறவி இப்படி நடப்பாராக யிருந்தால் இலங்கையில் சிறுபான்மையினங்களின் உரிமைகளும் பாதுகாப்புக்களும் எத்தன்மையிலுள்ளதென்பதை தெரிந்து கொள்வதில் கடினம் இருக்க முடியாது.

# மாணவனை காணவில்லை மனித உரிமை குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்ற மாணவனைக் காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரணவாய் விழுந்தாலடியைச் சேர்ந்த கருணாநிதி நிலக்ஷன் (வயது 13) என்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவனை இவ்வாறு காணாமல் போயுள்ளாரென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

கடந்த 10-ம் திகதியன்று பகல் 12.30 மணியளவில் நவிண்டில் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு சென்ற குறித்த மாணவன் வீடு திரும்ப வில்லை என மாணவனின் பெற்றோரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மாணவன் காணாமல் போன சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஏற்கெனவே முறையீடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# இடைநிறுத்தப்பட்ட விரிவுரைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் நான்காம் வருட கலைப்பீட மாணவர்களிற்கான விரிவுரைகள் இன்று ஆரம்பமாகும் என பல்கலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 31ஆம் திகதியன்று யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் நான்காம் வருட மாணவர்களிற்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டதையடுத்து கலைப்பீட மாணவர்களில் இராமநாதன் நுண்கலைக்கழகம் தவிர்ந்த மூன்றாம், நான்காம் வருட மாணவர்கள் பல்கலைக்கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும் பல்கலைக்கழக விடுதிகளில் தங்குவதற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் நடைபெற்று 14 நாட்கள் கடந்துள்ள நிலையில் மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட தடை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று வியாழக்கிழமை விரிவுரைகள் அனைத்தும் மீள ஆரம்பமாகும் என நிர்வாகம் அறிவித்துள்ளது. (எ-4)

# வாக்களிப்பு இல்லை மஸ்கெலிய மக்கள் முடிவு

(கொழும்பு)

இம்முறை மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கப் போவதில்லை என மஸ்கெலிய மக்கள் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த காலத் தேர்தல்களில் அளிக்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படாத காரணத்தினால் இவ்வாறான தீர்மானத்தை எடுத்துள்ளதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒவ்வொரு முறையும் தேர்தலுக்காக பிரசாரத்தில் ஈடுபடும் அரசியல்வாதிகள் போலியான வாக்குறுதிகளை அளிக்கின்ற போதிலும் அவை நிறைவேற்றப்படுவதில்லை.

எனவே இம்முறை வாக்கு சேகரித்து வரும் அரசியல்வாதிகளுக்கு தக்க பாடம் புகட்டத் தீர்மானித்துள்ளோம் என மக்கள் தெரிவித்துள்ளனர். (எ-11)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

14.08.2013க்கான வினாவும் விடையும்:-

வினா:- இறைவன் ஒருவரே என்றாலும் இந்து சமயத்தில் ஏன் பல வடிவங்கள் இருக்கின்றன?

விடை: மனிதமனம் பல்வகைப்பட்டது. எனவே இப்பல்வகைப்பட்ட மனதையுடைய மக்கள் அவரவர் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற விதத்தில் உரிய விதத்தைத் தெரிவுசெய்து வழிபட்டு மன ஒருமைப்பாட்டை அடைவதற்கு உதவியாக இறைவனின் பல வடிவங்கள் இருக்கின்றன.

15.08.2013: வினா:- நித்திரைக்குச் செல்லும்முன் இறைவனை வணங்குவது ஏன்?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கும் சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

# சத்திய தரிசனம்



அவன் தெய்வீக நிலைக்கு நாம் பேசும் வார்த்தைகள் சிறியதாக இருந்தாலும் வெறும் ஓசையாக இருந்தாலும் அதற்கு ஒரு அணுகுண்டுக்கு உள்ள சக்தியுள்ளது. ஆழ் ந்த வருத்தத்தில் இருக்கும் ஒருவனிடம் ஆனந்தம் என்ற சொல்லைக்கூறினால் அவனுக்கு யானையின் பலம் வந்துவிடும். வார்த்தைகள் மனிதனுக்கு பலத்தைத் தர வல்லது. நல்ல வார்த்தைகள் நண்பர்களை உருவாக்கும். சில வார்த்தைகள் நண்பர்களையும் விரோதிகள்ஆக்கிவிடும். ஒருவனை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவனுடைய வார்த்தைகளை ஒருவன் எப்பொழுதும் இனிமையான, கனிவான, மிருதுவான வார்த்தைகளையே பயன்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். ஒருவனுடைய வார்த்தைகள் தான் அவனுடைய தரத்தைத் தீர்மானிக்கிறது. வார்த்தைகள் மற்றொரு விதத்திலும் புண்படுத்துகின்றன. நாம் எங்கேயாவது பேசும் பொழுது பிறரைப் பற்றித் தாழ்த்தியோ, வேடிக்கையாகவோ, வெறுப்புடனோ, கேலியாகவோ, அவமானப்படுத்தும் விதமாகவோ பேசினால் அவைகள் மனம் என்ற நமது ஒலிப்பதிவுத் தகட்டில் பதிவாகி விடுகின்றன. ஒருவனுடைய உரையை ஒலிப்பதிவு செய்து வைத்தால் அவன் மறைந்த பின்பும்கூட நாம் கேட்கலாம். அதேபோல் நாம் உயிருடன் இருக்கும்போது நாம் எண்ணிய கெட்ட சிந்தனைகள், கடுஞ்சொற்கள், தீய திட்டங்கள் இவைகளால் உண்டான விளைவுகளும் தாக்கங்களும் நாம் மறைந்த பின்பும் மறையாமல் இருக்கும். அதனால் ஒருவன் கேலியான வார்த்தைகளையோ, துன்புறுத்தக் கூடிய வார்த்தைகளையோ அவதூறான வார்த்தைகளையோ பேசக்கூடாது. கேட்கவும் கூடாது. ஒருவரைப்பற்றி பொய்யான அவதூறுகளைக் கூறுவது மகாபாவமாகும். அதனால் நம்முடைய ஞானிகள் மௌனமே சிறந்த தியானமாக வலியுறுத்தியுள்ளனர்.


# அமைச்சருக்கு நெஞ்சுவலி வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

திடீரென ஏற்பட்ட இருதய நோய் காரணமாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நேற்று தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

தம்புள்ள பகுதியில் உள்ள அவரது வீட்டில் முற்பகல் 11 மணியளவில் ஆதரவாளர்களுடன் இருந்தபோது அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தம்புள்ளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கிருந்து கண்டி போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல ஆயத்தப் படுத்தப்பட்ட போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் இருந்து அனுப்பிய ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு, வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-11)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## வாசலில் பூ வைப்பது ஏன்?



மார்கழியில் கன்னிப்பெண்கள் வாசலில் அதிகாலைப் பொழுதில் கோலமிடும் போது நடுவில் சாணத்தில் பூசணிப்பூவை வைப்பர். அக்காலத்தில் பெண்கள் திருமணத்திற்காக காத்திருப்பதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தும் அடையாளமாக இவ்வாறு செய்தனர். வீட்டில் மங்கள நிகழ்வுகள் நடைபெறவேணடும் என்பதற்காகவே வாசலில் காப்பு கட்டினர்.மார்கழியில் பூவைத்தால் தை மாதத்தில் பெண்களுக்கு திருமண யோகம் உண்டாகும் என்பதை தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்வர். மேலும் அக்காலத்தில் ஆவாரம் பூவையும் பெண்கள் தலையில் சூடினர். இது தங்களது திருமண விருப்பத்தை பெற்றோருக்கும் தங்கள் மாமன் மார்களுக்கும் தெரிவிக்கும் அடையாளமாக இருந்தது. இதுபோல் பொங்கலுக்கு மறுநாள் வீடுகளில் பலவிதமான சித்ரான்னங்களான பொங்கல், புளியோதரை, எலுமிச்சை சாதங்களை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரைக்கு குடும்பத்தோடு செல்வர்.ஆற்றங்கரையில் கூடியிருந்து பொழுது போக்குவர். அங்கு அவரவர் தகுதிக்கேற்ப மணமகன் மணமகளைத் தேர்ந்தெடுப்பதும் அந்நாளைய வழக்கமாகும். திருணமத்திற்காக காத்திருப்பவர்களுக்கு வாழ்க்கைத் துணை[illegible] விட்டாள். எங்கும் இனி கெட்டிமேளம் ஒலிக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரீபியன் பிறீமியர் தொடர்;

# வாகை சூடியது அன்ரிகுவா அணி

கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் அன்ரிகுவா, பார்படோஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் அன்ரிகுவா அணி வெற்றி பெற்றுள்ளது. ஓட்டங்கள் மிகக்குறைவாகப் பெறப்பட்ட இப்போட்டியில் அன்ரிகுவா அணி கடுமையான போராட்டத்தின் பின்னர் வெற்றிபெற்றது.

சேர் விவியன் றிச்சர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பார்படோஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது.

சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்த அவ்வணி, 5 விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களுடன் தடுமாறியது. 6ஆவது விக்கெட்டுக்காக 38 ஓட்டங்கள் பகிரப்பட்டதோடு, அதன் பின்னர் மீண்டும் விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் பார்படோஸ் அணி சார்பாக றேமன் றெய்ஃபர் 42 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களுக்கு அதிகமாகப் பெற்றுக் கொள்ளாததோடு, நான்கு வீரர்கள் மாத்திரம் இரட்டைப்படை ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்ரிகுவா அணி சார்பாக ஷெல்டன் கொட்டரெல் 4 விக்கெட்டுக்களையும், கேமர் றோச், மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், றஹீம் கோர்ன்வெல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

98 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அன்ரிகுவா அணி 19 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதல் 5 பந்துகளில் 12 ஓட்டங்கள் பெறப்பட்டு வேகமான ஆரம்பமாக இருந்த போதிலும், 6ஆவது பந்தில் விக்கெட் இழக்கப்பட்டது. எனினும் 8.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 46 ஓட்டங்களுடன் பலமாகக் காணப்பட்ட அவ்வணி, அதன் பின்னர் மிக மெதுவான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இறுதியில் 19 ஓவர்களின் நிறைவில் வெற்றிபெறப்பட்டது.

துடுப்பாட்டத்தில் அன்ரிகுவா அணி சார்பாக ஓர்லன்டோ பீற்றர்ஸ் 22 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்றார். அத்தோடு மார்லன் சாமுவேல்ஸ் 28 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஷகிப் அல் ஹசன், ஆஷ்லி நேர்ஸ், சொய்ப் மலிக், ஷனொன் கப்றியல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இதில் சொய்ப் மலிக் 4 ஓவர்களில் 3 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்தார். இது டுவென்டி டுவென்டி போட்டிகளில் 4 ஓவர்களில் விட்டுக் கொடுக்கப்பட்ட குறைவான ஓட்டங்களுக்கான சாதனையைச் சமப்படுத்தியது.

இப்போட்டியின் நாயகனாக ஷெல்டன் கொட்டரெல் தெரிவானார்.

# முடிவெடுக்கவேண்டிய நிலையில் ஜெக் கலிஸ்



தனது ஒருநாள் சர்வதேசப் போட்டி எதிர்காலம் குறித்துத் தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் முடிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவின் புதிய பயிற்றுவிப்பாளர் றசல் டொமிங் கோவின் வேண்டுகோள் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் டெஸ்ட் அணியில் தொடர்ந்தும் முக்கியமான வீரராகக் காணப்படும் ஜக்ஸ் கலிஸ், இறுதியாக 2012ஆம் ஆண்டிலேயே ஒருநாள் சர்வதேசப் போட்டியொன்றில் பங்குபற்றியிருந்தார். ஆனால் 2015ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணத்தில் பங்குபெறும் தனது ஆவலை அவர் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கு முன்னர் பயிற்றுபிப்பாளராகக் கடமையாற்றிய கரி கேர்ஸ்ரனின் பயிற்றுவிப்பின் போது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஜக்ஸ் கலிஸ் விரும்பும் போது பங்குபற்றும் உரிமை வழங்கப்பட்டிருந்தது.

இதுவரை காலமும் ஜக்ஸ் கலிஸின் சாதனைகளை மதிக்குமடிப்படையில் இது வழங்கப்பட்டிருந்தது.

எனினும் புதிய பயிற்றுவிப்பாளராகப் பதவியேற்றுள்ள றசல் டொமிங்கோ அவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்ற மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் வழங்கியுள்ள பேட்டியின் அடிப்படையில், 2015ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் ஜக்ஸ் கலிஸ் பங்குபெற விரும்பினால், அவர் தென்னாபிரிக்கா சார்பாக ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபெற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தனது ஒருநாள் சர்வதேசப் போட்டி எதிர்காலம் குறித்து ஜக்ஸ் கலிஸ் முடிவெடுக்க வேண்டிய நிலை ஜக்ஸ் கலிஸிற்கு ஏற்பட்டுள்ளது.

# வீழ்ந்தார் மரியா சரபோவா



அமெரிக்க சின்சின்னாட்டி நகரில் வெஸ்டர்ன் அண்டு சதர்ன் ஓபன் டெனிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான ஒற்றையர் போட்டியில் உலகின் 3ஆம் நிலை ஆட்டக்காரரான ரஷ்யாவின் மரியா சரபோவா, 17ஆம் நிலை ஆட்டக்காரரான அமெரிக்க வீராங்கனை ஸ்லோன் ஸ்டீபனுடன் மோதினார்.

சிறப்பான ஆட்டத்தை துவங்கிய மரியா சரபோவா தொடக்க செட்டில் நன்றாக விளையாடினார். பின்னர் காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக மரியா சரபோவா சரியாக விளையாடாததால் இறுதியில் ஸ்லோன் ஸ்டீபனிடம் 2-6, 7-6(5), 6-3 என்ற செட்டுகளில் தோல்வியை தழுவி வெளியேறினார்.

மற்றொரு போட்டியில், உலகின் இரண்டாம் நிலை ஆட்டக்காரரான பெலாராசின் விக்டோரியா அசாராங்கே, அமெரிக்காவின் வேனியா கிங் என்ற வீராங்கனையுடன் மோதினார். இதில் அசாராங்கே காயம் அடைந்தாலும், பின்னர் நிதானமாக விளையாடி 6-1, 7-6(6) என்ற நேர் செட்டுகளில் வெற்றி பெற்றார்.

# சூதாட்டத்தில் ஈடுபட்ட 9 பேர் இடைநிறுத்தம்

பங்களாதேஷ் பிறீமியர் லீக் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியில் நடைபெற்ற சூதாட்டம் தொடர்பாக 9 பேரை இடை நிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி).

இந்த 9 பேரில் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக 7 பேரும், சூதாட்டத் தரகர்கள் தங்களை அணுகியது தொடர்பாக புகார் தெரிவிக்காமல் இருந்ததற்காக இருவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அதேவேளையில் இடைநிறுத்தப்பட்ட 9 பேர் குறித்த விபரங்களை ஐசிசி வெளியிடவில்லை. அவர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை விசாரணை தொடங்கியுள்ளது. அது முடிந்த பின்னர் இடைநிறுத்தப்பட்டவர்களின் பெயர் வெளியிடப்படும் என்று ஐசிசி தெரிவித்துள்ளது.

# சமநிலையை நோக்கி ஆஷஷ் மகளிர் டெஸ்ட்



இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும் மகளிர் ஆஷஷ் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியற்ற முடிவை நோக்கி நகர்ந்துள்ளது.

மூன்றாம் நாளில் இங்கிலாந்து அணியும் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய தையடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

6 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

மூன்று வீராங்கனைகள் மாத்திரமே இரட்டைப்படை ஓட்டங்களைப் பெற்றிருந்ததோடு, லாரா மார்ஷ் மிகவும் மெதுவான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஹீதர் நைற் 157 ஓட்டங்களையும், லாரா மார்ஷ் 304 பந்துகளில் 55 ஓட்டங்களையும், சாரா றெய்லர் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக எரின் ஒஸ்போர்ண் 4 விக்கெட்டுக்களையும், ஹொலி பேர்லிங் 2 விக்கெட்டுக்களையும், எலைஸ் பெரி, மேகன் ஸ்கட், சாரா கோய்ற் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 3ஆவது நாள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதன் மூலம் அவ்வணி 81 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மெக் லனிங் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும், றாசெல் ஹெய்ன்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜெனிகண் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

4 நாள் போட்டியான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த அவுஸ்ரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்று தங்களது இனிங்ஸை இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 14ஆவது உலக தடகளப் போட்டியில்...

உலக தடகள மகளிர் 20 கிலோ மீற்றர் நடைப் போட்டியில் ஒலிம்பிக் சம்பியனும், உலக சாதனையை வைத்திருப்பவருமான ரஷியாவின் எலினா லஷ்மனோவா 1 மணி நேரம், 27 நிமிடங்கள், 8 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார். இதன்மூலம் இப்போட்டியில் 2ஆவது தங்கப் பதக்கத்தை வென்றது ரஷயா. முன்னதாக 2ஆவது நாளில் நடைபெற்ற ஆடவர் 20 கி.மீ. நடைப் போட்டியில் ரஷயாவின் அலெக்சாண்டர் இவானோவ தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

மகளிர் 20 கி.மீ. நடைப் போட்டியில் வெளளிப் பதக்கமும் ரஷ்யாவுக்கே கிடைத்தது. அந்நாட்டின் அனிஷ்யா கிர்டியாப்கினா (1:27:11) வெள்ளிப் பதக்கம் வென்றார். இவர் கடந்த உலக சம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்றது குறிப்பிடத்தக்கது.

கடந்த உலக சம்பியன்ஷிப்பில் வெள்ளி வென்ற சீனாவின் ஹாங் லியூவுக்கு இந்த முறை வெண்கலப் பதக்கமே கிடைத்தது. அவர் 1 மணி நேரம், 28 நிமிடம், 10 விநாடிகளில் இலக்கை எட்டினார்.

மகளிர் 20 கி.மீ. நடைப் போட்டியில் இந்தியாவின் சார்பில் பங்கேற்ற குஷ்பிர் கொர், 1 மணி நேரம், 34 நிமிடம், 28 விநாடிகளில் இலக்கை எட்டி, 39ஆவது இடத்தைப் பிடித்தார். இதன்மூலம் அவர் தனது பழைய தேசிய சாதனையை (1:37:28) முறியடித்து புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.

ஆடவர் 50 கிலோ மீற்றர் நடைப் போட்டியின் இறுதிச்சுற்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. இதில் இந்தியாவின் சார்பில் பகதூர் ராணா, சந்தீப் குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

உலக தடகள சம்பியன்ஷிப் ஆண்கள் வட்டு எறிதல் போட்டியில் ஜேர்மனியின் ராபர்ட். ஹார்ட்டிங் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். இதன்மூலம் உலக தடகள சாம்பியன் ஷிப்பில் தொடர்ந்து 3ஆவது முறையாக தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார் ஹார்ட்டிங். 14ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள லூஷினிகி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

போட்டியின் 4ஆவது நாளான செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆண்கள் வட்டு எறிதல் போட்டியில் ஒலிம்பிக் சம்பியனான ஜேர்மனியின் ராபர்ட் ஹார்ட்டிங், தனது 4ஆவது முயற்சியில் 69.11 தூரம் வட்டு எறிந்து தங்கம் வென்றார். போலந்தின் பீட்டர் மலாசெஸ்கி 68.36 மீ. தூரம் வட்டு எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றார். இதன்மூலம் உலக தடகள சம்பியன்ஷிப்பில் 2ஆவது முறையாக வெள்ளி வென்றுள்ளார் மலாசொஸ்கி. முன்னதாக 2009இல் இவர் வெள்ளி வென்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தில் மோதல்....

உயிரிழந்திருக்கலாம் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அங்குள்ள ராபா அல் அடாவியா பள்ளி வாசலுக்கு வெளியே இருக்கும் ஒரு போராட்ட முகாமுக்கு அருகிலிருக்கும் பிபிசியின் செய்தியாளர் ஒருவர் அங்கு துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டு கண்ணீர் புகை குண்டுகளும் வீசப்படுவதாக கூறினார்.

அங்கு வீதிகளில் டயர்கள் எரிக்கப்படுகின்றன, வான் வெளியில் ஹெலிக் காப்டர்கள் வட்டமிட்ட வண்ணம் உள்ளன.

போரட்டம் நடைபெற்ற மற்றொரு இடமான அல் நஹ்டா சதுக்கத்தில் இருந்தவர்கள் ஏற்கெனவே அகற்றப்பட்டுள்ளனர்.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாய் இஸ்லாமிய சகோதரத்துவக் கட்சி கூறுகிறது.

ஆனால் கெய்ரோவிலும் நாட்டின் பிற பகுதிகளிலுமாக 95 பேர் கொல்லப்பட்டுள்ளதாக எகிப்து சுகாதார அமைச்சு கூறுகிறது.

அரசின் இந்த நடவடிக்கையின் போது பாதுகாப்பு படையினர் இருவர் கொல்லப்பட்டதாகவும், முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எகிப்து அதிபர் அலுவலகம் ஒருமாத காலத்திற்கு நாடளாவிய ரீதியில் அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது. தலைநகர் உட்பட பல இடங்களில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# ஈழம் என்ற கனவை....

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளதால், பயங்கரவாதம் தொடர்பிலான ஆபத்தான நிலைமை நாட்டிற்குள் இல்லை என்று சிலர் நினைப்பது பெரும் தவறு என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

புத்தளம் நாத்தாண்டிய கட்டுநேரிய பிரதேசத்தில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்களின்கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழம் என்ற கனவை கைவிட முடியாத சலர் புலம்பெயர் தமிழர்களில் உள்ளனர். அவர்கள் தமது கனவை நனவாக்கி கொள்ளும் நோக்கத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் நோக்கம் மாறாமல் தொடர்கின்றது. ஆனால் அவர்கள் கடைபிடித்து வரும் நடைமுறையில் மாற்றங்கள் உள்ளன.

அவர்கள் இலங்கையின் முதலீடு, சுற்றுலா துறைகளின் வளர்ச்சிகள் தொடர்பிலான விடயங்களுக்கு எதிராக செயற்பட்டு பொருளாதார வளர்ச்சியின் மீது தாக்குதல்களை தொடுக்கும் முனைப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற அவர்கள் மனித உரிமைகளை பிரதான ஆயுதமாக பயன்படுத்தி வருகின்றனர் என்றார். (எ-11)

# ஜனாதிபதி தலைமையில்....

விடயம் குறித்து அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் தேர்தல் அலுவலகங்களை ஆளும் கூட்டணி ஆரம்பித்து விட்டது. தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கான பிரதிநிதிகளை நியமிக்கும் செயற்பாடுகள் தற்போது இடம் பெற்றுவருகின்றன.

தற்போது சிறியளவிலான பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகின்றோம். இம்மாதம் 25-ம் திகதியுடன் அந்த செயற்பாடு முடிவடைந்ததும் வீடு வீடாக சென்று பிரசாரப் பணிகளை முன்னெடுப்போம்.

அனைத்து வீடுகளுக்கும் செல்வதற்கு திட்டமிட்டுள்ளோம். அதன் பின்னரே வடக்கில் பிரதான பிரசாரக் கூட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் பிரதான பிரசாரக் கூட்டங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

என்னதான் அரசாங்கம் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டாலும் வடக்கு மக்கள் கூட்டமைப்புக்கே வாக்களிக்கும் போக்கு காணப்படுவதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு நிலைமை இல்லை. மக்களுக்கு நாங்கள் விடயங்களை தெளிவுபடுத்தி வருகின்றோம்.

அரசாங்கம் வடக்கில் விரைவான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. எனினும் வடக்கில் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. ஆனால் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். குறிப்பாக விதவைப் பெண்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன.

எனவே ஆளும் கூட்டணியின் வேட்பாளர்கள் மக்களின் பிரச்சினைகளை கண்டறிவதில் அதிக ஆர்வம் செலுத்துகின்றனர். அந்த வகையில் வடக்கில் யார் அர்ப்ப ணிப்புடன் உள்ளனர் என்பது மக்களுக்கு நன்றாக தெரிந்த விடயமாகும். எனவே மக்களின் ஆதரவு எமக்கு உள்ளது என்றார். (எ-11)

# காணாமல்போனோர்....

எனவும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வழங்கிய அறிவுறுத்தலின்போது வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பு நல்வாழ்வு என்பவற்றுக்காகவும் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதை தடுப்பதற்கும் இவ்விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது என ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-11)


## யாழ்ப்பாணம் மாநகர சபை
## வடிகால் வேலைக்கான கேள்வி அறிவித்தல்-2013

கீழ்க்குறிப்பிட்ட வேலைக்கு ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.


1. கேள்விப்பத்திரங்கள் 2013.08.15-ம் திகதி முதல் 2013.08.23-ம் திகதி வரை நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.
2. கேள்விப்பத்திரங்கள் 2013.08.23-ம் திகதி பி.ப 02.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே பி.ப 2.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.
3. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **வடிகால் வேலைக்கான கேள்வி** என எழுதி "மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்" என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிலோ நேரடியாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. மேலதிக விபரங்களை யாழ்.மாநகர சபையின் வேலைப் பகுதியில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயரும்அமை விடமும் | ஆகக் குறைந்த பதிவுத் தரம்(ICTAD) | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்க முடியாத கேள்வி விண்ணப்ப படிவத் தொகை ( VAT,NBT உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | காட்டுக்கந்தோர் வீதிபக்கவடிகால் அமைத்தல் | C8 | 57,000/= | 3,249/= |

குறிப்பு:- வேலைகள் யாவற்றையும் 2013.11.30-ம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்படவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

திருமதியோ.பற்குணராஜா
மாநகர முதல்வர். யாழ்ப்பாணம். (C-4330)


# அன்னையின் அருட்கடலில் திளைத்திருக்கும் பக்தர்கள்



தேவியின் அனுக்கிரஹத்தை அடைய உகந்த மங்கள மாதம், சர்வசுபமான ஆடி மாதம், பல காலங்களாய் இம் மாதத்தில் பக்தர்கள் சக்தியை பூஜித்து விரதம் இருந்து தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் மங்களம் நல்க வேண்டும் என்றும், பொன் பொருளைத் தரவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்வது வழக்கமே. ஆகவே தான் அந்த லோகமாயைக் கூடத் தன் பக்தர்களை தடுத்தாட்கொள்ள பூலோகத்தில் பிறவி எடுப்பதற்கு இதனை தேர்ந்தெடுக்க சங்கற்பித்தாரோ என்னவோ!

இறைவன் தானே வரமுடியாத காரணத்தால் இந்தப் பூலோகத்தில் பெற்ற தாயை உருவாக்கினார். ஆனால் அந்தப் பரம்பொருளிற்கு கூட, என் பிள்ளைகளுக்கு நானே ஒருமுறை தாயாக வேண்டும். அவர்களுக்கு அன்பு அமுதத்தை நானே ஊட்டவேண்டும் எனும் அவா மேலோங்கியதோ என்னவோ, அதற்காகவே அன்னை பத்மாவதி தேவியாகி இந்தத் தரணியின் மேல் உறைந்திருக்க ஆயத்தமாகி விட்டார். ஆந்திரப் பிரதேசத்தின் நெல்லூர் ஜில்லாவில் உள்ளது சங்கம் என்னும் குக்கிராமம். தேவியர்க்கு தேவி, அந்த விஷ்வ ஜனனி ஒரு பச்சிளங் குழந்தையாகக் தாய்ப்பாட்டு கேட்பதற்கு, 'காபோலு பெஞ்சலம்மா' மற்றும் 'சின்னவெங்கடய்யா' அவர்களுக்கு எட்டாம் குழந்தையாய் ஆகஸ்ட் பதினைந்தாம் நாள் 1954 ஆம் வருடம் சதய நட்சத்திரத்தில் அவதரித்தார்.

அந்த குழந்தையின் பிறப்பினால் பூதேவி புளகாங்கிதம் அடைந்தாள், மற்றும் ஒருமுறை அந்த ஜெகத் ஜனனியை பெற்றெடுக்கும் பேறு தனக்குக் கிடைத்ததில் பரவசம் அடைந்தாள். நம் எல்லோரையும் பெற்றெடுத்த தாயானவள், ஒரு தாயின் மடியில் கிடந்து தாலாட்டு பாடல்களைப் பாடவைத்துக் கொண்டார்.

அந்தப் பால்முக குழந்தையைப் பார்த்த அந்த ஊரின் பெரியோர் மற்றும் ஞானியர் சாஷாத் பார்வதி தேவியே இந்த வீட்டில் குழந்தையாய் பிறந்துள்ளாள் என்று கூறியவாறு இருந்தனர்.

சின்னச்சின்ன அடியெடுத்து வைக்கும் அந்த சின்னக் குழந்தையைப்பார்த்து மனம் பறிகொடுக்காத பெண்களே இல்லை. மழலையாய் அவள் கூறும் அழகிய சொற்களைக் கேட்டு மயங்காதவர் எவரும் இல்லை அவ் ஊரில்.

அந்த கிராமவாசிகளுள் அவர்களுக்கும் தெரியாமல் ஒரு பரிணாமம் ஏற்பட்டது. அவர்கள் யாவரும் சொல்லில் அடங்கா தெய்வபக்தி யில் மூழ்கிப்போய் பூசைகளையும் விரதங்களையும் செய்யத் தொடங்கினர்.

நம்செல்ல அம்மாவை தன் மடியில் வைத்து தாலாட்டி விளையாட அந்த ஊர் எத்தனை ஆயிரம் வருடங்களாகத் தவம் செய்ததோ தெரியவில்லை.

அம்மா என்று அழைத்தால் இனிமை, அந்த இனிமையை இதயத்தில் நிலைத்திருக்க செய்ய வேண்டும் என்றாலும் நம் அம்மாவை தெரிசித்து மனதார அம்மா என்று அழைக்க வேண்டியதே.

ஒருவேளை இப் புவியில் இருக்கும் அன்பை எல்லாம் மூட்டைகட்டினால் அதுவே அம்மாவின் அழகிய இளநகை ஆயிற்றோ? ஒருமுறை ஒரு பக்தன் ஸ்ரீ பகவானிடம் பணிவோடு கைகளைக் குவித்து, பகவான் தீட்சை சமயத்தில் நான் செய்யும் பிரார்த்தனைகளை நீங்கள் கேட்டு எனக்கு விரைவில் பதிலளிக்க வேண்டும் என்றால் நான் என்ன செய்யவேண்டும் என்று கேள்வியெழுப்பினான்.

அப்போது ஸ்ரீ பகவான் முறுவலித்து அப்படியென்றால் நீங்கள் அம்மாவிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். அம்மா உங்கள் பிரார்த்தனைகளை விரைவாகக் கேட்டு அருள்பாலிப்பார்கள். நான் கூட அருள்தருவேன். ஆனால் நான் உங்கள் பூர்வ ஜென்ம வினைகளையும் சம்ஸ்காரங்களை இன்னும் எத்தனையோ காரணிகளை கூட கருத்தில் கொள்கின்றேன்.

ஆகையால் உங்களுக்கு ஞானம் கொடுத்து உங்களுள் உன்னத பரிணாமத்தை கொண்டுவர விழைகிறேன். ஆனால் அம்மா அப்படியல்ல. குழந்தை கஷ்டத்தில் இருக்கின்றான். இந்த கஷ்டம் முதலில் தீர வேண்டும். பிறகு ஞானம் என்பார்கள் என்று கூறினார்.

அம்மா என்று அழைத்தவுடனேயே, என்ன கண்ணா... சொல்லு... நான் உனக்காகவே இருக்கின்றேன் இல்லையா என்று வாத்சல்யத்துடன் நம்மை நெஞ்சோடு அணைக்கும் அம்மாவின் அன்பை எவ்வளவு அனுபவித்தாலும் ஆசை தீராது.

அன்னையின் கருணைப் பாற்கடலில் திளைக்கும் பக்தர்கள் அவரின் பிறந்த நாளுக்கென காத்திருந்து அதி விசேஷத்துடன் அதனைக் கொண்டாடுவர்.


ஆடி மாதம் முழுவதும் வீடுகளில கலச பூசையை செய்து அம்மாவிடம் அஷ்ட ஐஸ்வர்யங்களை கோரி பிரார்த்திப்பார்கள். இன்னும் சில பகுதிகளில் பக்தர்கள் அம்மாவின் பிறந்தநாளை முன்னிட்டு சோலை வனங்களுக்குச் சென்று அம்மையாரை ஊஞ்சலாட்டிவித்து நிலாச்சோறு கூட உண்பார்.

பக்தர்களின் இச்சைகளைக் குறிப்பறிந்து நிறைவேற்றுவதற்கே அவதரித்துள்ள நம் அம்மா தன் அருள் மழையை பக்தர்களின் பால் ஒவ்வொரு வருடமும் இருமடங்காக்கும் நாள் ஆகஸ்ட் 15.

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான்
சத்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டோ-வடி வாகனம் விபத்து ஆட்டோ சாரதி படுகாயம்



(யாழ்ப்பாணம்)

ஆட்டோவும் வடி ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஆட்டோச் சாரதி படுகாயமடைந்த நிலையில் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இருப்பினும் ஆட்டோ பலத்த சேதங்களுக்குள்ளானதோடு வடி ரக வாகனத்தின் முன்பகுதியும் சேதங்களுக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் காங்கேசன்துறை வீதியில் கோண்டாவிலுக்கும் தாவடிக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆட்டோச் சாரதியான நல்லூரைச் சேர்ந்த எஸ்.சிறிலவன் (வயது 45) என்பவரே ஒரு கால் முறிவுற்ற நிலையில் உடலின் ஏனைய பாகங்களிலும் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சாரதி வேகமாக ஆட்டோவைச் செலுத்தி வந்ததாகவும் இதன்போது முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த வடி ரக வாகனத்துடன் மோதிக் கொண்டதெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஆட்டோச் சாரதி முன்பக்க கண்ணாடியை உடைத்துக் கொண்டு நடு வீதியில் விழுந்ததாகவும் விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வீதியில் சுமார் 100 மீற்றருக்கு மேலாக இரு வாகனங்களினதும் கண்ணாடித் துண்டுகள் பரவிக் கிடந்தன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)


## உடன் விற்பனைக்கு

உழவு இயந்திர Site link (புதியவை)

கலப்பை Toplink (புதியவை)

உழவு இயந்திர ரயர்கள் (பாவித்தவை)

பாரவூர்தி (Tippers) ரயர்கள் (பாவித்தவை)

அனைத்தும் 16.08.2013 அன்று மாலை 3 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0774150799

முகவரி: இல. 274, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4324)



G.A.Q, B.A, B.A (Final)

யாழ்ப்பாணம், பேராதனை.

விரிவுரைகள் நடைபெறுகின்றன

வரலாறு S.S.தாஸ் (சி-4323)

(கையேடுகள் வழங்கப்படுகின்றன)

BEACON பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.நகர்





ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.

புதிய வகுப்பு: 17.08.2013 11am -1pm ( Sat & Sun)

61, Kachchery-Nallur Road, Jaffna T.P. 021 222 8093

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்) (3619)



சிகரம் அதிதுரித

## ஆங்கிலக் கற்கைநெறி



அடிப்படையிலிருந்து ஆரம்பித்து அதிதுரிதமாக ஆங்கிலத்தில் உங்களைப் பேசவைப்போம்!

Pre Level – அடிப்படை ஆங்கில அறிவு இல்லாதவர்களும் இணையலாம்

2 மாதங்கள் (60 மணித்தியாலயங்கள்)
திங்கள் - வெள்ளி வரை, வாரத்தில் 5 நாட்கள்

ஆசிரியர்
சண்முகம் முத்துலிங்கம்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி - முற்பதிவு அவசியம்.

ஆரம்பம் வெள்ளிக்கிழமை காலை 8.30

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி

153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMRO வுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798 (சி-4326)


## எதிர்க் கட்சிகள்....

கப்பட்டது.

வெலிவெரியவில் பொதுமக்கள் மீது துப்பாக்கியால் சுட உத்தரவிட்டது யார் என்பது அறிவிக்கப்பட வேண்டும், சுட்டவரைக் கைது செய்ய வேண்டும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் அந்த மகஜரில் காணப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் , கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, சிறிதுங்க ஜயசூரிய, சரத் மனமேந்திர, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஜித் பிரேதாச, ருவான் விஜேவர்த்தன உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-11)

## தென்....

தெரிவித்துள்ளது.

அதேவேளை இலங்கை தொழிலாளர்களுக்கு வழங்கும் வேலை வாய்ப்புகளை அதிகரிக்குமாறு இலங்கை தென்கொரியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தென்கொரியாவுக்கு விஜயம் செய்திருந்த போது, அந்த நாட்டின் வெளிவிவகார முதலாவது பிரதியமைச்சர் கிம் கியூ ஹெயூனை சந்தித்த போது இந்த கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. (எ-11)

# அமெரிக்கா- இலங்கைக்கிடையில் முரண்பாடுகள் எதுவும் கிடையாது

## இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு



அமெரிக்காவுடன் முரண்பாடுகள் கிடையாது என அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

சில விடயங்கள் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவிய போதிலும், முரண்பாடுகள் எதுவும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத இல்லாதொழிப்பு நடவடிக்கைகளின்போது, புலி ஆதரவு அமைப்புக்களுக்கு எதிராகவும் அமெரிக்கா மெய்யான ஒத்துழைப்பை வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், பயிற்சி, தொழில்நுட்ப உதவி உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அமெரிக்கா இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் போதும் நல்லிணக்க முனைப்புக்களின் போதும் அமெரிக்கா வழங்கிய ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்ட முதல் மேற்குலக நாடாக அமெரிக்கா திகழ்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க எந்த வகையிலும் ஒத்துழைப்பு வழங்க முடியாது .

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவில் காத்திரமான பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளது.

எவ்வாறு எந்தக் காலப்பகுதியில் பரிந்துரைகளை அமுல்படுத்துவது என்பது தொடர்பில் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் நிலவி வருவதாகவும், இதனை விரிசலாக கருத முடியாது எனவும் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார். (எ-11)

## அரசாங்கத்துடன்....

னித்திருந்தது.

எனினும், இந்த தீர்மானத்தை மீறி சில உறுப்பினர்கள் ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளனர். இதன் காரணமாக குறித்த உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை,சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினமிரவு சவூதி அரேபியாவுக்கு சென்றுள்ளார்.

அவர் புனித மக்கா நகரில் உம்ரா கடமையையும் நிறைவேற்றுவார். அமைச்சருடன் கிழக்கு மாகாண அமைச்சரும், முஸ் லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான ஹாபிஸ் நஸீர் அஹமத்தும் அங்கு சென்றுள்ளார். (எ-11)


## வெல்லுங்கள்

சர்வதேச நாடுகளுக்கான விமானப் பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்பவர்களுக்கு நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இச்சலுகை வழங்கப்படுகின்றது

I Phone, Printer, Mixy, Tv, Table Fan இலவசம் (சி-4328)

Nation Popular Travels & Tours
#128, Brown Road Jaffna
0214 920 920



## பராமரிப்பாளர் தேவை


யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் வயோதிப தம்பதியர் இருவரை உடனிருந்து பராமரித்து பாதுகாப்பதற்கு கண்ணியமும் காருண்ணியமும் கொண்ட பெண்மணி ஒருவர் உடன் தேவையாகவுள்ளார். தங்குமிடம், உணவு வசதிகள் செய்து தரப்படும். தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0756472653, 0770387742 (3612)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் விவேகானந்தன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர், காங்கேசன்துறை)



சித்தன்கேணி சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விவேகானந்தன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர், காங்கேசன்துறை) நேற்று (14.08.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (ஓய்வு பெற்ற தபாலதிபர், யாழ்) திலகவதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், வாகீசபிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நித்தியமங்களா தேவியின் அன்புக் கணவரும், மணிவண்ணன், கிருத்திகா, காலஞ்சென்ற நீதிவண்ணன் மற்றும் மதிவண்ணன், நாகவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜராஜேஸ்வரி, சுரேந்திரன், தயாளினி ஆகியோரின் அன்பு மாமனும், லக்சிகனிஎன் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வமதி அருணாசலம்பிள்ளை மற்றும் ராமநாதன், சர்வேஸ்வரி, பரமேஸ்வரி, கனகாம்பிகை, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.08.2013) வியாழக்கிழமை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணி (சி-4329) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.